பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

வலம்புரி

The Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 03 புதன்கிழமை (20.08.2003) தொலைபேசி - 2223378 ஒலி 244

# புலிகளின் திட்டவரைபில் முஸ்லிம்களின் அபிலாசை நிறைவேற்றப்படும்!

## கொழும்பு செல்லமுன்னர் தமிழ்ச்செல்வன் தகவல்

(கிளிநொச்சி)

**தமிழீழ விடுதலைப் புலிகள் வேண்டி நிற்கும் இடைக்கால நிர்வாகம், தமிழர் தாயகத்தில் வாழுகின்ற சகல மக்களுக்கும் உரியதொன்றாகும். இவ்வாறு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பாரிஸிற்குப் புறப்படுமுன்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, விடுதலைப் புலிகளிடம் முன்வைத்துள்ள வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்டவரைபை புலிகளின் பன்னாட்டு சட்டவல்லுநர்களுடன் பாரிஸில் கூடி ஆராய்ந்து இறுதி வடிவத்தை தயாரிப்பதற்காக வன்னியில் இருந்து கொழும்புக்கு புறப்பட முன்னர் செய்தியாளர் மத்தியில் பேசிய சு.ப.தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 2மணிக்கு கிளிநொச்சி பொது மைதானத்திலிருந்து உலங்கு வானூர்தி மூலம் கொழும்புக்கு புறப்பட முன்னர் செய்தியாளர்களிடம், தனது பாரிஸ் பயணம் குறித்து கருத்துத் தெரிவித்த தமிழ்ச்செல்வன், இடைக்கால நிர்வாக அலகில் முஸ்லிம் மக்களுடைய அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் கவனம் எடுக்கப்படும். வடக்குக் கிழக்கை தாயகமாகக் கொண்ட அனைத்து மக்களுக்கும் நன்மை அளிக்கக் கூடிய வகையில் இவ் அமைப்பு இருக்கும்.

எம்மைப் பொறுத்தளவில் நாம் தமிழ பேசும் மக்களின் எதிர்பார்ப்புக்கள். அபிலாசைகளுக்கு அமைவாகவே இத் திட்டத்தை முன் வைக்கவுள்ளோம்.இந் நிலையில் ஸ்ரீலங்கா அரசு இதனை ஏற்றுக் கொள்ளும் என நம்புகின்றோம்.

எம்மால் அரசுக்கு சமர்ப்பிக்கப் படவுள்ள இடைக்காலநிர்வாக சபைத் திட்டவரைபானது தமிழர் தாயகததில் வாழுகின்ற அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உரியதொன்றாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார். (ம)

## முஸ்லிம்களை பாதுகாக்க ஒஸாமா படைப் பிரிவு?

(நமது நிருபர்)

முஸ்லிம் மக்களைக் காப்பாற்றுவதற்காக 'ஒஸாமா' படைப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கிழக்கு மாகாணத்தில் அண்மைக் காலமாக முஸ்லிம் மக்கள் அச்சுறுத்தப்படுவதையும்,கொலை செய்யப்படுவதைத் தடுத்து, அவர்களைக் காப்பாற்றுவதற்காகவுமே 'ஒஸாமா' படைப் பிரிவை முஸ்லிம் வர்த்தகர் அப்துல்வகஸ் ஆரம்பிக்கப் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## திருகோணமலைக்கு புதிய இராணுவத் தளபதி

(கொழும்பு)

திருகோணமலை மாவட்ட இராணுவத் தளபதியாக பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்ட இராணுவத் தளபதியாக கடமையாற்றிய பிரிகேடியர் ஜோன் செனிவீரா

(10ம் பக்கம் பார்க்க)

## முகமாலை இராணுவச் சாவடியில் விடுதலைப்புலிகள் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

முகமாலை சோதனைச் சாவடியில் வைத்து விடுதலைப்புலிப் போராளிகள் இருவர் நேற்றுமாலை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் கொடிகாமம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு சாவகச்சேரி நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து பெறப்பட்ட சயனைட் குப்பிகளும் இலக்கத் தகடுகளும் யாழ்.மாவட்ட அரசியல் துறையினரிடம் பொலிசாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்திலிருந்து ஆயுதங்களைக் கடத்திச் சென்ற போதே கைது செய்யப் பட்டதாக இராணுவம் தெரிவித்

(10ம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கு உடன் பாதுகாப்பு வழங்குக

### ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சருக்கு உத்தரவு

(கொழும்பு)

ஈ.பி.டி.பி.உட்பட ஏனைய தமிழ் அரசியல் குழு உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு வழங்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் தமிழ்க் குழுக்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது.இதனால் அவர்கள் பல இன்னல்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

இராணுவமும் பொலிஸாரும் அவர்களுக்கு போதிய தனிப்பட்ட பாதுகாப்பை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி இது தொடர்பாக ஒரு வார காலத்துக்குள் அறிக்கை ஒன்றைத் தனக்கு சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (இ-5)

## கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்பை உடன் உறுதி செய்க!

### பாதுகாப்பு அமைச்சர் உத்தரவு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தி அப் பகுதி முஸ்லிம் மக்களின் இயல்பான வாழ்வை உறுதி செய்யும் வகையிலான சகல நடவடிக்கைகளும் உடனடியாக எடுக்கப்படும்.

கிழக்கு மாகாண இன்றைய நிலை தொடர்பில் நேற்றைய தினம் காலை 9 மணி முதல் பாதுகாப்பு அமைச்சின் தலைமையகத்தில் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கும் இடையில் இடம் பெற்ற அவசர அதிமுக்கிய கலந்துரையாடலில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திடீர் தௌபீக், எம்.எஸ்.தௌபீக் ஆகியோரும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தலைமையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ,இராணுவத் தளபதி லயனஸ் பலகல்ல, கடற்படைத் தளபதி தயா சந்தகிரி, விஷேட அதிரடிப்படை கட்டளை அதிகாரி நிமால் குணரட்ண ஆகியோரும் இக்கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

கிழக்கு மக்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளமை அவர்களின் அன்றாட இயல்பு வாழ்வின் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் மற்றும் தொடரும் மர்மக் கொலைகள் ஆகியன குறித்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் சுட்டிக் காட்டியதையடுத்து

(10ம் பக்கம் பார்க்க)

## காணாமல் போன இளைஞனை தேடிச்சென்றவரையும் காணவில்லை!

### யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனவரை தேடிச் சென்றவரும், காணாமல் போய்விட்டாரென யாழ்மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைச் சேர்ந்த தேவராஜா கனிஸ்ரன் (வயது20) என்ற இளைஞன் காணாமல் போனதை அடுத்து, அவரைத் தேடிச் சென்ற அவரது உறவினரான புங்குடுதீவுள 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த ஏ.மரியகுமார் (வயது 35) என்ற குடும்பஸ்தரும் காணாமல் போய்விட்டாரென்று அம் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப் பரபரப்பான சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

கனிஸ்ரன் என்ற பிரஸ்தாப இளைஞன் கிளிநொச்சியில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் பணி புரிந்து வந்தவர். இவர் கடந்த மே மாதம் 5-ந் திகதி கிளிநொச்சியில் இருந்து தனது ஊரான புங்குடுதீவுக்கு வருவதற்காகப் புறப்பட்டு வந்த்வர் இடையில் காணாமல் போய்விட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் உயர் மட்டக் குழு இன்று பாரிஸ் புறப்படும்

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகளிடம் அரசு கையளித்த இடைக்கால நிர்வாக சபை திட்டவரைபு குறித்து சர்வ தேச சட்ட நிபுணர் குழுவினருடன் பாரிஸில் கூடி ஆராய்வதற்காக தமிழர் தாயகப் பிரதேசங்களில் இருந்து விடுதலைப் புலிகளின் உயர் மட்டக் குழு நேற்று கொழும்பு புறப்பட்டுச் சென்றுள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் தொல்காப்பியன், நெடியோன், அலெக்ஸ், மொழி பெயர்ப்பாளர் ஜோர்ஜ், அறிவு ஆகியோர் கிளிநொச்சிப் பொது மைதானத்தில் இருந்தும விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா அம்மான், போராளிகளான கஸ்ரோ, பாரதிராஜ் ஆகியோர் மட்டக்களப்பில் இருந்தும் உலங்கு வானூர்திகள் மூலம் நேற்றுப் பிற்பகல் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

ஏற்கனவே கொழும்பு சென்றிருந்த விடுதலைப் புலிகளின் சமாதான செயலணிச் செயலாளர்

(10ம் பக்கம் பார்க்க)

### உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

### வடக்கு கிழக்கு மாகாண சபை

# வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD)

### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

### "ஆஅவ" கடன் இல. 1846 ~ SRI (SF)

# கேள்வி அறிவித்தல் - 21

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்காக இந்த் கடனின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில் தருனராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்ட கேள்விச் சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

### அட்டவணை

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | KN/NECORD/IR/03 | கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடுக்குளக் கால்வாய் புனர் நிர்மாணம் - தொகுதி 1 (முதல் நிலை வேலைத் தொகுதி) | M4 | 204, 000/= |
| | | கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடுக்குளக் கால்வாய் புனர் நிர்மாணம் - தொகுதி 2 (முதல் நிலை வேலைத் தொகுதி) | M6 | 73, 000/= |
| | | கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடுக்குளக் கால்வாய் புனர் நிர்மாணம் - தொகுதி 3 (வாய்க்கால் அமைப்பு) | M6 | 63, 000/= |
| | | கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடுக்குளக் கால்வாய் புனர் நிர்மாணம் - தொகுதி 4 (வாய்க்கால் அமைப்பு) | M7 | 22, 400/= |
| 02. | KN/NECORD/IR/01 | கிளிநொச்சி மாவட்டத்தில் புதுமுறிப்புக் கால்வாய் புனர் நிர்மாணம் - தொகுதி 3 (வாய்க்கால் அமைப்பு) | M7 | 23, 000/= |
| 03. | MU/NECORD/IR/01 | முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டு கால்வாய் புனர் நிர்மாணம் - தொகுதி 2 (வாய்க்கால் அமைப்பு) | M6 | 62, 000/= |

| | | | | |
|---|---|---|---|---|
| 02. | [illegible] | [illegible] - தொகுதி 3 (வாய்க்கால் அமைப்பு) | M7 | 23, 000/= |
| 03. | MU/NECORD/IR/01 | முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டு கால்வாய் புனர் நிர்மாணம் - தொகுதி 2 (வாய்க்கால் அமைப்பு) | M6 | 62, 000/= |
| | | முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார் கட்டு கால்வாய் புனர் நிர்மாணம் - தொகுதி 3 (வாய்க்கால் அமைப்பு) | M7 | 20, 000/= |
| 04. | MU/NECORD/IR/05 | முல்லைத்தீவு மாவட்டத்தில் மடவலசிங்க குள கால்வாய் புனர்நிர்மாணம் - தொகுதி 3 (வாய்க்கால் அமைப்பு) | M5 | 179, 000/= |
| | | முல்லைத்தீவு மாவட்டத்தில் மடவலசிங்க குள கால்வாய் புனர்நிர்மாணம் - தொகுதி 3 (வாய்க்கால் அமைப்பு) | M7 | 29, 000/= |
| 05. | TC/NECORD/IR/02 | திருகோணமலை மாவட்டத்தில் எதண்ட முறிப்புக் கால்வாய் புனர்நிர்மாணம் - தொகுதி 1 (முதல்நிலை வேலைத்தொகுதி) | M6 | 85, 000/= |
| | | திருகோணமலை மாவட்டத்தில் எதண்ட முறிப்புக் கால்வாய் புனர்நிர்மாணம் - தொகுதி 2 (வாய்க்கால் அமைப்பு) | M7 | 33, 000/= |
| | | திருகோணமலை மாவட்டத்தில் எதண்ட முறிப்புக் கால்வாய் புனர்நிர்மாணம் - தொகுதி 3 (செல்லும் வழி) | M7 | 33, 000/= |
| 06. | AM/NECORD/RD/01 | அம்பாறை மாவட்ட லதுகல பாலம் புனரமைப்பு | M6 | 91, 000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறு விலையிடல் திறந்துள்ளது.

(I) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரம் 1இல் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(II) இலங்கைத் தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக ("ICTAD" உடன் மேற்படி M7க்கு மேலே பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) இருக்கவேண்டும்.

(III) கடந்த 5 வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த 5வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடம் இருந்து அத்துடன்/ அல்லது உசாவலர்களிடம் இருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின்போது, மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

(IV) இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்ட்வாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்விகோரும் ஆற்றலளவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(V) கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்கவேண்டும்.

4. மேற்படி பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமையவேண்டும். ஏதேனும் ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நீக்கோட் திட்டத்தின் கீழ் நடைமுறையில் இருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும். 2003 ஆடி 1ஆம் திகதிக்குப் பின்பு தங்களைப் பதிவுசெய்த கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர்கள் இதுபோன்ற வேலைகளை அல்லது இதற்குச் சமமான வேலைகளை ஒப்பந்தகாரர்களாகவோ, அல்லது உப ஒப்பந்தகாரர்களாகச் செய்திருந்தால் வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒரு நேரத்தில் ஆகக் கூடுதலாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒப்பந்தம் ஒன்றாகும்.

(06 பக்கம் பார்க்க)

## நல்லையில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவததை ஒட்டி இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம் பெற்று வரும் தெய்வீக இசையரங்கில் 18 ஆம் திருவிழாவான இன்று வி. கே.கானமூர்த்தி குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

* * *

நல்லைக் கந்தன் உற்சவத்தை ஒட்டி யாழ்.மாவட்ட வடபிரதேச இந்துப்பேரவை ஏற்பாட்டில் ஆலயத் தேரடியில் அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இடம்பெற்றுவரும் தெய்வீக இசைத்தொடரில் இன்று மாலை 6.00மணிக்கு ''குருவாய் வருவாய்'' எனும் பொருளில் சிவத்திரு எம். எஸ்.ஸ்ரீதயாளன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

* * *

நல்லூர்க் கந்தன் வருடாந்த உறசவத்தை ஒட்டி நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீமுத்து விநாயகர் மண்டப அரங்கில் பிரம்ஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் ''திருவிளையாடற் புராணம்'' தொடரில் இன்று ''இசையும் இறைவனும்'' என்ற விடயும்பற்றி இசைப் பேருரை இடம்பெறவுள்ளது. (உ-18)

## மரத்தின் கீழ் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையம்

(மருதங்கேணி)

வவுனியா மாவட்டத்தில் மதியாமடுப்பகுதியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம் கட்டட வசதி இன்றி மரநிழலில் இயங்கி வருகின்றது.

எவ்வித பாதுகாப்பும் இல்லாத நிலையில் வீதிக் கருகாமையில் அமைந்துள்ள ஒரு பெரும் ஆலமரத்தின் கீழ் புற்றறைகளின் கீழ் அமர்ந்திருந்தே இவ் அலுவலகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ் ஆரம்ப சுகாதார நிலையத்தினை 50க்கும் மேற்பட்ட குழந்தைகளும் 10ற்கும் மேற்பட்ட கற்பிணித் தாய்மாகளும் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-35)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமை ஒழிப்புத் திட்டம்

(மருதங்கேணி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வறுமைக் கோட்டின்கீழ் வசிக்கும் பெருமளவு மக்களைக் கொண்ட 5கிராமங்களை, பொருளாதார ரீதியில் கைதூக்கி விடும் பணியில் எக்கோ நிறுவன அனுசரணையுடன் கியூடெக் அமைப்பு ஈடுபடவுள்ளது. இந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கோவில் குடியிருப்பில் 19பேரும், செல்வபுரத்தில் 35பேரும், மணற்குடியிருப்பில் 35பேரும், வண்ணாங்குளத்தில் 36பேரும், கள்ளப்பாட்டில் 72 பேருமாக 197 பயனாளிகள் தெரிவு செய்யபபட்டு இவர்களை சுயதொழிலில் ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. (உ-35)

## நல்லூரான் திருவடிக்கு

### (இன்று கார்த்திகைத் திருவிழா)



### கார்த்திகை கந்தனே

நீல மயில் மீதுநாளும் வலம் வந்து
நீங்காத அழகுடன் காட்சிதரும்
அலங்கார வண்ணனே அழகுமிளிர் குமரா
அமைதியை நாட்டில் நிலைபெற செய்ய
உந்தன் சேவலும் மயிலும் எமைக்காக்க
உலகில் உயிரினங்கள் யாவும் இன்பமுடன்
இனிதே வாழ்வாங்கு வாழவைக்க
கார்த்திகை கந்தா காரிருளை போக்கிடையா

கொழும்புத்துறை செ.அச்சுதன்

---

## முஸ்லிம்களை அரசு பாதுகாக்க வேண்டும் அல்லது ஆயுதம் வழங்கவேண்டும்

### இதுவே இன்றைய நிலைப்பா டென்கிறார் அன்வர் இஸ்மயில்

(மட்டக்களப்பு)

முஸ்லிம் மக்களின்பாதுகாப்பை உறுதிசெய்ய அரசு தவறி வருவதன் காரணத்தால், தொடர்ந்தும் அரசுக்கு ஆதரவளிப்பது என்ற நிலைப்பாட்டை முஸ்லிம் காங்கிரஸ் மீள் பரிசீலனைக்குட்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மயில் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுவது தொடர்கதையாகி நீண்டு செல்வது குறித்து பி.பி.சி.தமிழோசைக்கு நேற்று வழங்கிய பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்ட அன்வர் இஸ்மயில் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

வடக்குக். கிழக்கில் வாழுகின்ற முஸ்லிம் மக்கள் தங்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களே அன்றி அபிவிருத்திபற்றி இப்போதைக்குச் சிந்திக்கும் நிலையில் அவர்கள் இல்லை.

வட -கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்புக் குறித்து அரசுடன் பல தடவைகள் பேச்சு நடத்தியுள்ளோம்.

மூதூர் மற்றும் வாழைச்சேனையில் இடம்பெற்ற சம்பவங்கள் போன்று ஏனைய இடங்களிலும் இடம்பெறக் கூடும் என்பதை அரசுக்கு முன்னரே பல சந்திப்புக்களில் உணர்த்தி இருக்கிறோம் என்றார்.

மேலும், இவ்வாறு முஸ்லிம்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத பட்சத்தில் நாங்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதையோ அரசுக்கு ஆதரவு அளிப்பதையோ முஸ்லிம் மக்கள் விரும்ப மாட்டார்கள் என்று சுட்டிக்காட்டியதுடன்,

சமாதானத்தைக் குழப்பும் சக்திகளை விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினரால் ஏன் கண்டு பிடிக்க முடியாதுள்ளது என்றும் அவர் கேள்வி எழுப்பினார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசு ஆரம்பத்தில் இருந்தது போன்று சோதனைச் சாவடிகளை அதிகம் அமைத்து அதிலே மேலதிக பொலிஸாரை பணிக்கு அமர்த்த வேண்டும் அல்லது முஸ்லிம் மக்களின் பாதுகாப்பிற்காக எங்களுக்கு ஆயுதம் வழங்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

அதேசமயம், தமிழ்-முஸ்லிம் மக்கள் இன்றுவரை மிகவும் ஒற்றுமையாக எந்தவித பாகுபாடும் இன்றியே நடந்து வருகின்றனர்.ஆனால் திட்டமிட்ட சில சக்திகள் தமிழ் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையைக் கண்டு மனம் பொறுக்காமலும், முஸ்லிம் சமுதாயத்தின் மீதுகொண்ட காழ்ப்புணர்ச்சி காரணமாகவும் இத்தகைய சம்பவங்களின் பின்னணியில் இருந்து முஸ்லிம்-தமிழ் மக்களிடையே கலவரத்தைத் தூண்டி அவர்களின் அமைதியான வாழ்வைக் குழப்புகின்றனர்.

எனவே, இது விடயத்தில் அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் தமக்குரிய சில கட்டுப்பாடுகளைப் பின்பற்றவேண்டும்.

குறிப்பாக, அரசாங்கம் தனது குடிமக்களை பாதுகாக்க வேண்டியது மிக முக்கியமானதாகும்.

அத்துடன் இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசைத் தூக்கி எறிந்து விட்டு ஐககிய தேசிய முன்னணியை ஆட்சிப் பீடமேறச் செய்தோம் என்பதை அரசும் விடுதலைப் புலிகளும் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.

எனவே, சமாதானத்தைக் கொண்டு வந்த மக்களை, பாதுகாக்கும் பொறுப்பு அரசிற்கு மட்டுமல்ல விடுதலைப் புலிகளுக்கும் தான் இருக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ-10.03)

## வருமானச்சட்டமூலம் முரணற்றது

(கொழும்பு)

தேசிய வருமான விசேட விதிமுறைச சட்டமூலம் அரசியல் அமைப்புக்கு முரணானது அல்ல என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இததீர்ப்பினை சபாநாயகர் ஜோசப மைக்கல் பெரேரா நேற்றுக் காலை பாராளுமன்றத்தில் அறிவித்தார்.(தி)

## இனப்பிரச்சினைத் தீர்வின் இலக்கை எய்த பரஸ்பரம் புரிந்துணர்வு அவசியம்

### பட்டி வீரக்கோன் கருத்து

(கொழும்பு)

அரசாங்கத்தாலும், தமிழீழ விடுதலைப்புலிகளாலும் முன்னெடுத்துச் செல்லப்பட்ட சமாதான நடவடிக்கைகளுக்கு அடித்தளமாக அமைந்தவை மக்களின் ஆதரவுதான் என லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் பட்டிவீரக்கோன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் நடவடிக்கைகளுக்கு கட்சி பூரண ஆதரவு அளித்து வருகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் போர் நிறுத்த உடன்படிக்கையின் நிபந்தனைகளின்படி பரஸ்பரம் புரிந்துணர்வுடனும், நேர்மையான ஒத்துழைப்புடனும் நடந்துகொண்டால் மாத்திரமே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இலக்கை எய்தமுடியும்.

மேலும் விடுதலைப் புலிகள்மீது சர்வதேச உலகத்தால் கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கை மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

1994ஆம் ஆண்டு சமாதான முயற்சிகளை பொதுஜன ஐக்கிய முன்னணியே ஆரம்பித்தது. போர்நிறுத்த உடன்படிக்கையுடன்கூடிய தற்போதைய நடவடிக்கைகள் அவற்றின் இரண்டாவது கட்டம்.

இந்த விடயத்தில் போர்நிறுத்த உடன்படிக்கையினை அனுசரித்து நடக்குமாறு புலிகளைத் தூண்ட வேண்டும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு கடந்த 2000ஆம் ஆண்டில் முன்வைத்த அரசியல் யாப்புத் திருததப் பிரேரணை நிலையான தீர்வு நோக்கிய பயணத்தின் முதலடியாகும்.

அதில் முக்கிய அம்சமான அதிகாரப் பகிர்வு அலகு உள்ளடக்கி இருந்தது.

இப் பிரேரணை அங்கீகரிக்கப்பட்டு, அமுல்செய்யப்படும் நாள் தொடக்கம் அது ஸ்தாபிக்கப்படும் வகையில் யோசனைகள் கூறப்பட்டிருந்ததை மறுக்கமுடியாது.

இனப்பிரச்சினைத் தீர்வில் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக தமிழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேறும் வகையில் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கான முழுமையான அதிகாரப் பகிர்வை அரசியல் யாப்பின் மூலம் உறுதிசெய்வதையே இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டது.

இத்தகைய சூழ்நிலையில் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக, அதிஉயர் பாதுகாப்பு வலய, கரையோரப் பிரதேசக் கோரிக்கைகளுக்கு இறுதித் தீர்வை எட்ட எந்த வகையிலும் முடியாது.

எவ்வாறாயினும், வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் சிவில் அரசியல், ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தி)

---

### பதில்கேட்டு மனம்நொந்தேன் உமைமைந்தனே

பல்லவி

பழம்கேட்டு மனம்நொந்த வேல்வேந்தனே -உன்தன்
பதில்கேட்டு மனம்நொந்தேன் உமைமைந்தனே-மாவின்
(பழம்...........)

அனுபல்லவி

பழம்தந்து ஔவைக்குத் தமிழ் சொன்னவா-உயர்
பழநல்லைப் பதிதன்னில் வளர்வேலவா-சுவைப்
(பழம்..........)

சரணம்

பெற்றோரை உலகெல்லாம் துதிசெய்யுதே-இதை
முற்றாக மனத்தெண்ணத் துறந்ததென்னே?-நீல
மயில்மேலே வலம்செய்யத் துணியும்முன்னே-உன்தன்
பெற்றோரை வலம்செய்ய மறந்த தென்னே?-கந்தா
(பழம்.........)

கிடைக்காத கனிக்காகத் துறவேற்றநீ-கனி
கிடைத்தற்கு வழிகாணப் பின்நின்றதேன்?-உன்
தவறென்றே கனிதோற்க வழிசெய்ததை-இன்னும்
தவறென்று பொறுப்பேற்கப் பின்நிற்பதேன்?- குமரா
(பழம்.........)

வயலூர் முருகன

---

### கைகூப்பி இறைஞ்சிடுவோம்

கார்த்திகைப் பெண்களின் கையணைப்பில் வந்தவனே
நேர்த்திகள் செய்து உனை நித்தம் பணிகின்றோம்
போர்த்திரை நீங்கி நாம் புது வாழ்வு பெற்றிடவே
கார்த்திகைத் திருநாளின்று கைகூப்பி இறைஞ்சிடுவோம்

ஆர்த்தெழுந்த அரக்கர் படை அழித்தே -தேவர் குலம்
கீர்த்தி பெற அருள் புரிந்த மாயனின் மருகோனால்
பார்த்திருக்கப் பகைவர் படை பஞ்சாய்ப் பறந்திடவே
கூர்வடி வேலவா உன்னை கைகூப்பி இறைஞ்சிடுவோம்

சாதுபதி நெல்லியடி

# லைபீரியாவில் விரைவில் இடைக்கால அரசு அமைக்கும் முயற்சிகள் மும்முரம்

## சமாதான உடன்பாடு செய்துகொள்ள இருதரப்பும் இணக்கம்

(மொன்ரோவியா)

லைபீரியாவில் இடைக்கால அரசாங்கமொன்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

லைபீரிய அரசாங்கமும் தீவிரவாதிகளும் இது தொடர்பான சமாதான உடன்படிக்கையொன்றில் விரைவில் கைச்சாத்திடவுள்ளனர். இதற்கான பூர்வாங்கப் பேச்சுக் கள் முடிவடைந்துள்ளன. 14 வருடங்களாக லைபீரியாவில் இடம்பெற்று வந்த படுகொலைச் சம்பவங்களுக்கும், வன்செயல்களுக்கும் முடிவு காணும் நடவடிக்கையாகவே இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இதன் முதற்கட்டப் பேச்சுக்கள் கானாவின் தலைநகர் அக்ராவில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட போது, தீவிரவாதிகள் தங்களுடைய கோரிக்கைகளை முன் வைத்தனர்.

இதற்கமைய லைபீரியாவில் அடுத்தமாத நடுப்பகுதியில் புதிய இடைக்கால அரசு நிறுவும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

## சுரங்க விபத்து

சீனாவின் வடமாகாணத்திலுள்ள நிலக்கரிச்சுரங்கமொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 9 சுரங்கப் பணியாளர்கள் பலியாகியுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தையடுத்து அங்குள்ள முக்கியமான 5 நிலக்கரிச் சுரங்கங்கள் தவிர்ந்த ஏனைய நிலக்கரிச் சுரங்கங்கள் அனைத்தினதும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

சீனாவில் கடந்த ஒரு மாத காலத்திற்குள் இவ்வாறான நிலக்கரிச்சுரங்க விபத்துக்களினால் 100ற்கும் அதிகமான சுரங்கத் தொழிலாளர்கள் பலியாகியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)

உலக தரிசனம்

## அமெரிக்கப் படைகள் திருப்பி அழைக்கப்படும்

லைபீரியாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்கத் துருப்புக் களை அமெரிக்கா விரைவில் வாபஸ் பெறவுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 1ம் திகதி இத்துருப்புக்களை லைபீரியாவிலிருந்து மீண்டும் அமெரிக்காவிற்கு அழைக்கவுள்ளதாக அந்நாட்டு அதிபர் ஜோர்ச் டபிள்யு புஷ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நேர்காணல் ஒன்றின்போதே புஷ் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட ஒரு கால எல்லைக்குள் வரையறுக்கப்பட்ட ஒரு எண்ணிக்கையிலான துருப்பினர்களையே கடமையில் ஈடுபடுத்த முடியுமென்று புஷ் கூறியுள்ளார்.

மிக விரைவில் ஐக்கிய நாடுகளின் 'நீலகெல்மெற்' வீரர்கள் லைபீரியாவிற்கு வரவுள்ளதால் அமெரிக்கத் துருப்புக்களை வாபஸ் பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஒக்ரோபர் மாதம் முதல் லைபீரியாவில் புதிய அரசாங்கம் ஒன்று புதிய ஜனாதிபதி மோஸஸ்பிளாவிடமிருந்து பொறுப்புக்களை ஏற்கவுள்ளது. (பி-2)

## வடகொரியக் கப்பல்மீது தென்கொரியா எச்சரிக்கை வேட்டு

(சியோல்)

தென்கொரியா அதன் வட எல்லைப் பகுதியில் வைத்து வடகொரியக் கப்பலொன்றை நோக்கி எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்துள்ளது.

நேற்று முன்தினம் காலை தென்கொரிய எல்லையை வடகொரியா கப்பலொன்று ஊடுருவியதையடுத்தே தென்கொரியா இந்த வேட்டுக்களை தீர்த்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

5 எச்சரிக்கை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதும் வடகொரியக் கப்பல் அப்பகுதியிலிருந்து வாபஸ் பெற்றுள்ளதாக கூறப்படுகின்றது.

இச்சம்பவத்தின்போது அக்கப்பலில் இருந்தவர்கள் காயமடைந்தார்களா என்பது குறித்து தெரியவரவில்லை என தென்கொரியா தகவல்கள் கூறுகின்றன. (பி-2)

## பாதுகாப்பு மத நல்லிணக்கம் போன்ற பலதுறைகளில் வாஜ்பாய் அரசு தோல்வி கண்டுவிட்டது

### சோனியாகாந்தி குற்றச்சாட்டு

(புதுடில்லி)

இந்தியாவின் பாதுகாப்பு மத நல்லிணக்கம் உட்பட பல்வேறு துறைகளிலும் வாஜ்பாய் அரசு தோல்வியடைந்து விட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சோனியா காந்தி குற்றஞ்சாட்டினார்.



மக்களவையில் நேற்று முன்தினம் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய சோனியா காந்தி, தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மீது இவ்வாறான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார்.

அவர் பேசிய போது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் குறுக்கிட்டதால் அவையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

முன்னைய காங்கிரஸ் அரசுகளின் தவறான ஆட்சியினால்தான் நாடு முழு வளர்ச்சியடையவில்லை என்று துணைப்பிரதமர் எல்.கே.அத்வானி கூறியுள்ளார். (பி-2)

## தோல் புற்றுநோய்க்கு அஸ்பிரின் மருந்து; வேறு புற்றுநோய்களுக்கும் மருந்தாகலாம்

(லண்டன்)

சாதாரண வலி நிவாரணியாக பயன்படுத்தப்படும் அஸ்பிரின் மருந்துக்கு, ஒருவகை தோல் புற்றுநோயைக் குணப்படுத்தும் திறனும் இருப்பதை விஞ்ஞானி கள் கண்டுபிடித்துள்ளனர். இது பற்றிய தகவல் ''நேச்சர்'' என்ற இதழில் வெளியாகியுள்ளது.

உடலின் தோலில உளள மயிர்ககால்களில் இருந்தும், வியர்வைச் சுரப்பிகளில் இருந்தும், வளர்ந்து, காளான் வடிவக் கட்டிகளாக பெருகக்கூடிய ஒருவகை தோல் புற்றுநோயாகும். அது அரிய நோயாகும். மரபுவழியில் வரக்கூடியதுமாகும்.

இந்தவகை புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தோல் திசுக்களில் அழற்சி இருக்கும். அதிலிருந்து வெளியாகக்கூடிய மூலக்கூறுகளால் புற்றுநோய் செல்கள் உயிர்வாழ்ந்துகொண்டு இருக்கும் அஸ்பிரின் மருந்தா னது, அத்தோல் அழற்சியைக் குறைக்கிறது. அதனால், புற்றுநோய் செல்கள் உணவின்றி அழியும் நிலை ஏற்படுகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகின் றனர்.

நெதர்லாந்து, கிரீஸ், இஸ் ரேல் ஆகிய நாடுகளில் ஒரே நேரத்தில் இது தொடர்பான ஆய்வுகள் நடந்தன. அவை மூன் றும் 'நேச்சர்' இதழில் வெளியாகி யிருக்கின்றன. விஞ்ஞானி ஜார்ஜ் மோசியாலோஸ் தலைமையில் அந்த ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன.

''இப்போதைய ஆராய்ச்சியின் பயனாக, வேறுவகை புற்றுநோய்களுக்கும் அஸ்பிரினை மருந்தாகப் பயன்படுத்த வழிபிறக்கும். இரத்தப் புற்றுநோய்க்கும் கூட அஸ்பிரின் மருந்தாகக்கூடும்'' என்று ஜார்ஜ் மோசியாலோஸ் கூறினார்.

''பலவகையான புற்று நோய்கள் உருவாவதில் அழற்சி முக்கிய காரணமாக இருக்கிறது. எனவே, பல்வேறு வகை புற்றுநோய்களுக்கு சிகிச்சை அளிப்பதில் அஸ்பிரின் முக்கிய பங்காற்றமுடியும்'' என்றும் அவர் கூறியுள்ளார். (பி)

## தமிழைச் செம்மொழியாக்கக் கோரி தமிழ் அறிஞர்கள் உண்ணாவிரதம்

(சென்னை)

தமிழைச் செம்மொழியாக அறிவிக்குமாறு வலியுறுத்திப் புதுடில்லியில் நூற்றுக்கும் மேற்பட்ட அறிஞர்கள் நேற்றைய தினம் ஒருநாள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தனர்.

நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்ட இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பல தமிழ் மன்றங்களும், இந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

பழமையும் பெருமையும் வாய்ந்த தமிழ் மொழியை இந்திய மத்திய அரசு செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்று தமிழ் அறிஞர் கள் நீண்ட நாளாக கோரி வந்த னர்.

இக்கோரிக்கையை வலியுறுத்தி பெருங்கவி சேதுராமன் தலைமையில் தமிழ் அறிஞர்கள் பலர் நேற்றுக்காலை புதுடில்லியில் தமது போராட்டத்தை ஆரம்பித்த னர்.

இதேவேளை, தமிழைச் செம்மொழியாக்கக்கோரி தமிழ்நாட்டு பாரதிய ஜனதாக் கட்சி தலைவர்கள் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயை சந்தித்து மனுவொன்றைக் கையளித்தனர். (பி-2)

## பிரான்ஸ் தயக்கம் காட்டுவதால் லிபியா மீதான தடைநீக்கம் தாமதம்

### ஐ.நா.சபை குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

லிபியா மீதான ஐக்கிய நாடுகளின் பொருளாதாரத் தடையை நீக்குவது குறித்து பிரான்ஸ் அசமந்தப்போக்கை மேற்கொண்டு வருவதாக ஐ.நா.சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

பிரான்ஸின் இணக்கப்பாடு கிடைக்கும்வரை பொருளாதாரத் தடையை நீக்குவதில்தாமதம் ஏற்பட்டு வருவதாகவும் அது குறைகூறியுள்ளது.

1988ல் ''பானெம்ஜெம்போ'' என்ற அமெரிக்காவின் ஜெட் விமானம் தாக்கப்பட்டதற்கான பொறுப்பை லிபியா ஏற்றுக் கொண்டதுடன் அதற்கான நஷ்ட ஈடாக 270 கோடி அமெரிக்க டொலர்களை வழங்க அந்த நாடு இணக்கம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து லிபியா மீதான இந்த விசாரணைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், ஐக்கிய நாடுகளின் பொருளாதாரத் தடையை நீக்கவும் அமெரிக்காவும், பிரிட்டனும் உட்பட பாதுகாப்புசபை இணக்கம் தெரிவித்துள்ளது.

எனினும் பிரான்ஸ் இதற்கான விருப்பத்தை இன்னும் தெரிவிக்கவில்லை. பிரான்ஸ் விமானம் ஒன்று தாக்கப்பட்டதன் மூலம் உயிரிழந்த பிரான்ஸ் பிரஜைகளுக்கான நஷ்ட ஈட்டையும் லிபியா வழங்க வேண்டும் என்றும் அதன் பின்னரே பொருளாதாரத் தடையை நீக்க அங்கீகாரம் வழங்கப்படுமென பிரான்ஸ் தெரிவித்துள்ளது.(பி-2)

## மொராக்கோவில் 4பேருக்கு மரண தண்டனை

(கஸபபிளாங்கா)

மொராக்கோவில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய 4 பேருக்கு மொராக்கோ நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது. கடந்த மே மாதம் தலைநகர் கஸப்பிளாங்காவில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 12 குண்டுதாரிகள் உட்பட 45 பேர் கொல்லப்பட்டனர்.

20 வருடங்களின் பின்னர் மொராககோவில் இதுவரை ஒருவருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் இத்தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக 4 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)

## பங்களாதேஷ் படகு உரிமையாளர்களின் வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்துள்ளது

(டாக்கா)

பங்களாதேஷில் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட பாதுகாப்பு சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்நாட்டிலுள்ள படகு உரிமையாளர்கள் மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த படகு உரிமையாளர்களுடன் கப்பல்துறை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்து இவ்வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

சுமார் 400 படகு உரிமையாளர்கள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

படகுச் சேவை மூலம் பங்களாதேஷில் நாளொன்றுக்கு சுமார் ஒரு இலட்சம் பேர் பயணங்களை மேற்கொண்டு வருகின்றமையும், அதேசமயம் படகு விபத்துக்கள் மூலம் ஒவ்வொரு வருடமும் 100 இற்கும் அதிகமானோர் உயிரிழப்பதும் குறிப்பிடத்தக்கது. (பி-2)

## மூவாயிரத்துக்கும் அதிகமானோர் மரணம்: பிரெஞ்சு சுகாதார சபை பணிப்பாளர் பதவி விலகினார்

(பரிஸ்)

பிரான்ஸில் அண்மையில் ஏற்பட்ட கடும் உஷ்ணமான கால நிலை காரணமாக மூவாயிரத்திற்கு அதிகமானவர்கள் உயிரிழந்ததையடுத்து அந்நாட்டின் தேசிய சுகாதார அதிகாரசபை யின் பணிப்பாளர் பதவி விலகி யுள்ளார்.

பணிப்பாளர் லூஷியம் ஏபிரகாமின் இராஜினாமாவை சுகாதார அமைச்சர் ஜீவ் பிராங்கோலஸ் மாற்றா ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்த இயற்கை அனர்த்தத்தினால் மரணமானவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரமாக அதிகரிக்கும் சூழ்நிலை காணப்படுவதாகவும், இதனைத் தடுப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பிரான்ஸ் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (பி-2)

# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்
வினா இல. : 30 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

## உடன் தேவை

| எழுதுநர் (Clerk) | கணனித் தட்டெழுத்தாளர் (Computer Typist) |
|---|---|

- இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்
- விண்ணபத்திகதியன்று 30 வயதுக்குட்பட்டவராக இருத்தல்வேண்டும்
- குறித்த பதவியில் 5 ஆண்டு கால வேலை அனுபவம்
- ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்கத் தெரிந்திருக்கவேண்டும்
- க.பொ.த (உ/த) இல் 3 பாடங்கள் சித்தி
- யாழ். நகரை அண்மித்து வசிப்பவர்
- விண்ணப்பங்கள் யாவும் 2003 யு,ன்மாதம் 30ஆம் திகதிக்கு முன் கிடைக்கத் தக்கவாறு அனுப்பப்படல் வேண்டும்

| எழுதுநர் | கணனி இயக்குநர் |
|---|---|
| சிங்கள அறிவு பேச-வாசிக்க | கணனியை சிறப்பாக இயக்குதல் |
| க.பொ.த (சா/த) தமிழ் சிறப்புத்தேர்ச்சி | கணனியில் வேலை செய்த அனுபவம் |

01. 1971ஆம் ஆண்டு பிறந்த ஒருவர் மேலே உள்ள வேலைக்கு விண்ணப்பிக்க முடியுமா?
------------------------------------------------

02. ராகவன் வசிப்பது கிளிநொச்சியிலாகும். க.பொ.த (உ/த) பரீட்சையில் நான்கு பாடங்களில் சித்தியடைந்துள்ளான். அவனுக்கு ஆங்கிலமும் நன்கு பேச, எழுத, வாசிக்க முடியும். கணனியை இயக்கவும் வேலை செய்த அனுபவம் உண்டு. அவனால் கணனி இயக்குநர் வேலைக்கு விண்ணப்பிக்க முடியுமா?
------------------------------------------------

03. விண்ணப்பம் எதிர்பார்க்கப்படும் கடைசித் தினம் எது?
------------------------------------------------

04. இவ்விண்ணப்பத்தை அனுப்புபவர் எந்த மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்?
------------------------------------------------

**கீழே உள்ள 3 நபர்களினதும் விபரத்தை கவனமாக வாசிக்குக.**

| நந்து பாலேந்திரா | வரன் கந்தசாமி | தேவிகா மணியம் |
|---|---|---|
| பிறந்த திகதி: 1975.08.31<br>அனுபவம் 10 ஆண்டுகள்<br>வதிவிடம் யாழ்ப்பாணம்<br>ஆங்கிலம் பேசக்கூடியவர்.<br>க.பொ.த. (சா/த) பரீட் சையில் 8 பாடங்கள் சித்தி.<br>சிங்களம் பேச வாசிக்க முடியும். | பிறந்த திகதி : 1974.05.31<br>அனுபவம் : 9 ஆண்டுகள்<br>வதிவிடம் : முகமாலை<br>கணனி அறிவு உண்டு<br>க.பொ.த (உ/த)பரீட்சையில் 4 பாடங்கள் சித்தி<br>க.பொ.த. (சா/த) தமிழ் சிறப்புச்சித்தி, சிங்களம் பேச, வாசிக்க முடியும் | பிறந்த திகதி : 1974.08.24<br>வதிவிடம் : நல்லூர்<br>அனுபவம் : 8 ஆண்டுகள்<br>ஆங்கில அறிவு உண்டு<br>க.பொ.த (உ/த) பரீட் சையில் 4 பாடங்கள் சித்தி<br>க.பொ.த. (சா/த) தமிழ் சிறப்புச் சித்தி, சிங்களம் பேச, வாசிக்க முடியும் |

05. இம் மூவரிலும் எழுதுநர் பதவிக்கு விண்ணப்பிக்கக்கூடியவர் பெயரை எழுதுக.
------------------------------------------------

06. இந்த 3 நபர்களிலும் எழுதுநர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியாதவர் பெயரையும் காரணத்தையும் குறிப்பிடுக.
பெயர் ---------------- காரணம் ----------------


**கீழே ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள சொற்களின் கருத்தைத் தரும் சரியான தமிழ்ச் சொற்கள் மேலே உண்டு. அவற்றை அடையாளம் கண்டு எழுதுக.**

07. Clerk : ------------------ 09. Computer :------------------
08. Date of Birth: --------------- 10. Experence : ---------------


இல. 40 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் கந்தசாமி ரமணன் என்பவர் பிறந்தது 1975ஆம் ஆண்டு யூலை மாதம் 10ஆம் திகதியாகும். இந்து மதத்தைப் பின்பற்றும் அவர் திருமணம் ஆகாதவராவார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்விகற்ற அவர் க.பொ.த. (உ/த) பரீட்சையில் 4 பாடங்களில் சித்தியடைந்துள்ளார். யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் கணனிக் கல்வி பெற்று அங்கு 8 ஆண்டுகள் வரை கணனி இயக்குநராகப் பணிபுரிந்துள்ளார்.


இத்தகவலை ஆதாரமாகக் கொண்டு ரமணன் கந்தசாமி நீரென நினைத்து இவ்விண்ணப்பப்படிவத்தை நிரப்புக.
11. முழுப்பெயர் : ------------------
12. முகவரி : ------------------
13. பிறந்த திகதி : ------------------
14. 2003 யூன் 30ஆம் திகதி அன்று வயது : ------------------
15. சமயம் : ------------------
16. பால் :- ஆண்/பெண் : ------------------
17. வேலை அனுபவம் (ஆண்டுகளில்) : ------------------
18. முதல் வேலை செய்த இடத்தின் பெயர் முகவரி : ------------------
19. வாழ்வு நிலை:- திருமணமானவர்/திருமணமாகாதவர்: ------------------
20. கல்வித்தகமை : ------------------
21. விண்ணப்பிக்கும் பதவி 1)எழுதுநர் ☐ 2)கணனி இயக்குநர் ☐
(பொருத்தமானதற்கு நேரே உள்ள கூட்டில் புள்ளடி இடுக)


**பொருத்தமான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக**

22. 
A- மரம்
B- பிளாத்திக்கு
C- செம்பு
படத்தில் காட்டியவாறு A,B,C ஆகிய 3 கோல்கள் கொதி நீருள் வைக்கப்பட்டுள்ளன. எது விரைவில் சூடாகும்?
------------------------------------------------

23. 
அருகே உள்ள தாவரத்தை அவதானித்து பின்வருவனவற்றிற்கு உதாரணம் தருக.
1. பச்சை நிறமுடைய பாகம் ----------------
2. காயைத் தரும் பாகம் ----------------

24. பாறைகள் சிதைவடைந்து உருவாவது எது?
------------------------------------------------
25. சமாதானத்தைக் குறிக்கும் பறவை வெண்புறா போல் சமாதானத்தைக் குறிக்கும் இலை எது?
------------------------------------------------
26. தாவரம் ஒன்று செழித்து வளர அவசியமான காரணிகள் எவை?
------------------------------------------------
27. ஒலிம்பிக் விளையாட்டு எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்?
------------------------------------------------
28. அருகே காட்டப்பட்டுள்ள கருவியின் பெயர் என்ன?
------------------------------------------------



29. 
அருகே உள்ள உருக்களில் அதிகமாகக் காணப்படும் உரு எது?
------------------------------------------------

30. 

அருகேயுள்ள உருவத்தின் பரப்பளவு எவ்வளவு?
------------------------------------------------

**கீழ்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ளவற்றின் இயற்கை அமைவுகளை எழுதுக.**
உதாரணம்:



நீர், நிலம் ------------ ------------ ------------ ------------

**கீழே ஒரு கடித உறை தரப்பட்டுள்ளது. இதை வாசித்து விடை எழுதுக.**

| | |
|---|---|
| செல்வி க.வடிவாம்பிகை<br>28, பருத்தித்துறை வீதி,<br>யாழ்ப்பாணம் | திருமதி அன்னலட்சுமி இராசதுரை<br>12, அச்சுவேலி வடக்கு,<br>அச்சுவேலி. |

35. இக்கடிதத்தை அனுப்புபவர் பெயரை எழுதுக? ----------------
36. இக்கடிதத்தை பெறுபவர் யார்? ----------------
37. இக்கடித உறையில் முத்திரை ஒட்டவேண்டிய இடத்தில் **Stamp** என எழுதுக?
38. இக்கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் பதிவுத்தபால் என எழுதுக?

**கீழ்வரும் உணவுப் பொருட்களை நன்கு அவதானித்து விடை எழுதுக.**





39. குமரன் தனது காலைநேர உணவாக **A,B** இனை உட்கொண்டான். அவன் தான் உட்கொண்ட உணவின் மூலம் எத்தகைய போசனைப் பொருட்களைப் பெறுவான்?
**A** : ---------------- **B**: ----------------
40. **D** இல் உள்ள பழப்பாகு என்ன பழத்தினால் ஆக்கப்பட்டது என்பதைத் தமிழில் எழுதுக. ----------------
41. அவன் தனது மாலை நேர சிற்றுண்டியாக பயன்படுத்தக்கூடிய உணவுப்பொருளின் பெயரை எழுதுக. ----------------
42. "**NIRRON**" என்னும் உற்பத்திப் பெயர் கொண்ட உணவுப் பொருளின் தமிழ்ப் பெயர் என்ன? ----------------
43. உணவுப் பொருட்களைத் தகரத்தில் அடைப்பதற்கான காரணங்கள் 2 தருக.
1. ---------------- 2. ----------------
44. சாம்பவி செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் அசைவம் உண்பதில்லை. திங்கள், புதன் ஆகிய நாட்களில் முட்டையும் ஏனைய நாட்களில் ரின் மீனையும் உண்பாள். ஒரு முட்டை ரூபா 7.00 ஆகவும் ஒரு "**TIN FISH**" ரூபா 85/= ஆகவும் விற்கப்படின் அவளுக்கு ஒரு வாரத்தில் அசைவ உணவுக்கு ஆகும் செலவைக் காண்க.
------------------------------------------------

**மூன்று குடும்பங்களின் உணவு பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.**

| | ஆறுமுகம் குடும்பம் | கனகசபை குடும்பம் | மூக்கையா குடும்பம் |
|---|---|---|---|
| காலை உணவு | இடியப்பம், சொதி, முட்டை | தோசை, சம்பல் | பிட்டு, சம்பல், வாழைப்பழம் |
| மதிய உணவு | சோறு, உருளைக்கிழங்கு, மீன், வாழைப்பழம் | சோறு, உருளைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு | சோறு, மரவள்ளிக் கிழங்கு |
| இரவு உணவு | பாண், பட்டர், மாம்பழம் | பாண்,சம்பல்,வாழைப்பழம் | இடியப்பம் |

45. இவர்களில் உணவுச் சேர்மானத்தில் குறைபாடற்ற உணவுச் சேர்மானத்தை தமது உணவாகக் கொண்ட குடும்பம் எது? ----------------


**வரைபை அவதானித்து விடை எழுதுக**




46. கூடுதலாக விற்கப்பட்ட மரக்கறி வகை எது?
------------------------------------------------
47. வியாபாரி நிறுப்பதற்கு பயன்படுத்திய அலகுத்திட்டம் எது?
------------------------------------------------
48. வியாபாரியின் விற்பனையில் இடம்பெற்ற கிழங்கு வகைப் பயிர் எது?
------------------------------------------------

**சரியான விடை எழுதுக.**
49. 1ஆண்டு = ------------ வாரம் = ------------ மாதம்
50. மூன்று தொழிலாளர்கள் ஒரு நாளில் உழைத்த சராசரிப் பணம் ரூபா 105ஆகும். ஒருவர் ரூபா 100 உம் மற்றையவர் ரூபா 105 உம் உழைத்தார் எனின் மூன்றாமவர் பெற்ற தொகை என்ன? ----------------

**கீழ்வரும் வினாக்களில் சித்திரத்தில் பயன்படுத்தும் கோடுகளின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்களை கீழே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**




------------ ------------ ------------ ------------ ------------

**கீழே சில படங்கள் உண்டு. அவற்றின் கீழ் சில ஆங்கில வாக்கியங்கள் உண்டு. வாக்கியங்களுடன் தொடர்பு படும் சரியான படத்திற்குரிய இலக்கத்தை எழுதுக.**




56. I have a tail ---------------- 57. I have a Fins ---------------- 58. I have a beak ----------
59. I have a trunk ---------------- 60. I have a horns ----------------
61. Nurse 62. ---------------- 63.Break fast 64. ---------------- 65. Letter
---------------- விவசாயி ---------------- கைப்பந்து ----------------

**கீழே சில புலன் உணர்வுகள் தரப்படுகின்றன. இவற்றை அறிந்து கொள்வதற்கான எமது உடலில் உள்ள உறுப்புக்களின் சரியான ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

| புலன் உணர்வு | உணரும் உறுப்பு |
|---|---|
| 66. கற்பூர வாசனை | |
| 67. வானொலிப்பாடல் | |
| 68. அன்னாசிப் பழச்சுவை | |
| 69. தொலைக்காட்சி நாடகம் | |
| 70. அடுப்புச சூடு | |

**கீழே சில சமயப் பண்டிகைகள் தரப்பட்டுள்ளன. அவை எந்தச் சமயத்தவரால் கொண்டாடப்படுகிறது என எதிரே உள்ள இடைவெளியில் எழுதுக.**

| சமயப் பண்டிகை | கொண்டாடும் சமயத்தவர் |
|---|---|
| 71. நோன்புப் பெருநாள் | |
| 72. சிவராத்திரி | |
| 73. நத்தார்ப் பண்டிகை | |
| 74. வெசாக் | |
| 75. நவராத்திரி | |

**"விளையாட்டுப் போட்டியில் ஔவைப்பாட்டியாக நான்..." என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய், பயனிலையுடன் கூடிய ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருக்க வேண்டும்.**
------------------------------------------------

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல : 28

**கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:**

01. வே. சரண்ணியா- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
02. யோ. ஜென்சிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
03. கு சன்ஜீவன்- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
04. செ. சுவேதரன்- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
05. சி. நிலக்சன்- மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
06. பி. நிரோஷன்- மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
07. செ. சிவதரிசினி- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
08. பா. சங்கீர்த்தனா- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
09. ப. லக்சியா- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
10. ச. சுவஸ்திகா- இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை
11. த. தனுசியா - வல்வெட்டி விநாயகர் வித்தியாசாலை
12. பி. நந்தினி - வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
13. த. பிரியந்தி - கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
14. ப. தர்மிளா - சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்
15. செ. கலிஸ்ரா - நவாலி சென்பீற்றேர்ஸ் றோ.க.த.க.பாடசாலை
16. பி. யோபிதா - வல்வை சிவகுரு வித்தியாசாலை
17. செ. ஆருணன் - மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்
18. க. சுகந்தினி - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
19. க. தனுசீலன் - மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்
20. ந. சரணியா - மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
21. ஐ. நரேந்திரன் - ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்
22. க. கலீபன் - மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்
23. ம. மதுசன் - வட்டு. மத்திய கல்லூரி
24. சி. அபிராமி - யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
25. ஞா. தாரணி - யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
26. அ. சுகந்தன் - சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
27. அ. சுகிர்தன் - யா/ மத்திய கல்லூரி
28. ச. ஜயக்கணேஷ் - கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
29. செ. விஜோதா - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
30. ர. வதுஷனன் - யா/ மத்திய கல்லூரி
31. யோ. சரண்யா - சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம்
32. க. அகிலன் - வரணி மகா வித்தியாலயம்
33. ஆ. கஜீபன் - யா/மத்திய கல்லூரி
34. தி. அபர்ணா - கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
35. ச. சுவீபன் - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
36. ர. வினோதினி - கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
37. சி. டினோஜன் - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
38. ந. நிவாஷன் - யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
39. இ. பவீசன் - உடுவில் மகளிர் கல்லூரி
40. கி. நிதர்சன் - வரணி மகா வித்தியாலயம்
41. மு. பிருந்தா - நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
42. க. நீருஜா - வல்வை றோ.க.த.க. பாடசாலை
43. ம. இந்துஷா - மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
44. ச. திவிஜன் - உடுவில் மகளிர் கல்லூரி
45. செ. சிந்தூரியா - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
46. சோ. தனஞ்சயன் - தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை
47. ற. பரந்தாமன் - வல்வை சிவகுரு வித்தியாசாலை
48. த. தபோஜனன் - இணுவில் மத்திய கல்லூரி
49. அ. ராஜ்ஹரன் - கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி
50. த. விஜிதன் - கரவெட்டி இராமுப்பிள்ளை வித்தியாலயம்
51. ம. கர்விஜா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
52. பா. சந்திரா - வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
53. ம. நிரூபன் - வல்வை சிவகுரு விததியாசாலை
54. ம. வித்தியா - வல்வை றோ.க.த.க. பாடசாலை
55. ச. சோபிகா - துன்னாலை மே.மெ.மி.த.க. பாடசாலை
56. த. தேவப்பிரியன் - யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
57. க. நிகிந்தினி - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
58. இ. டணிசிகா - ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை
59. இ. மதனிகா - வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
60. ப. குகதர்சினி - அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
61. செ. மேரிராஜலீனா - வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
62. ந. நக்கீரன் - சுன்னாகம் இராமநாதன் கல்லூரி
63. த. துஷாந் - யா/ மத்திய கல்லூரி
64. சி. ஜோதிகா - யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
65. த. ஐங்கரன் - கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்
66. து. வைஷ்ணவி - ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
67. கு. கோபிராம் - சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
68. ச. தனேஷ் - திருநெல்வேலி இ.த.க.பாடசாலை
69. க. கரிசினி - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
70. வி. கல்யாணி - வல்வை றோ.க.த.க பாடசாலை
71. தெ. லவன்ஜா - வல்வை சிவகுரு வித்தியாசாலை
72. வி. கஸ்தூரி - வல்வை றோ.க.த.க.பாடசாலை
73. சி. ஜெயக்குமார் - வல்வை அ.மி.த.க. பாடசாலை
74. ஸ்ரீ. நீரஜா - வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
75. சி. சிவதீபன் - வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்
76. ம. கிருத்தியா - வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
77. கு. கௌதமன் - யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
78. ம. சரண்யா - சுன்னாகம். திருஞானசம்பந்த வித்தியாசாலை
79. தா. மயூரி - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
80. ம. கஜீபா - கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்
81. கு. பிரசாந் - யா/ மத்திய கல்லூரி
82. கா. துஷாந்தி - யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்
83. யோ. ஆரணி - தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி
84. சி. சிவகரன் - சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்
85. செ. திருக்குமரன் - கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
86. லி. கருஷன் - இணுவில் மத்திய கல்லூரி
87. ர. சாம்பவி - சுன்னாகம் இராமநாதன் கல்லூரி
88. தி. ஜனத்குமரன் - கோப்பாய் றோ.க.த.க.பாடசாலை
89. நா. திருவதனன் - உடுவில் மகளிர் கல்லூரி
90. ச. ஜெயபாரதி - வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
91. ஜெ. கீர்த்தனா - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
92. க. வாணுஜா - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
93. கி. காவேரி - யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
94. ச. ஷண்மதுரன் - சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாசாலை
95. சி. கௌதமி .- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
96. ந. பவிதா - ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
97. யோ. வசந்தன் - உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி
98. செ. கலையரசி - வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
99. சி. மதுஷன் - யாழ்ப்பாணக் கல்லூரி
100. செ.சாருகா - மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
101. ம. அபிவர்ஷனி - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
102. சி. பிரணவீ - தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி
103. பா. ஜீவிகா - மட்டுவில் அ.மி.த.க. பாடசாலை
104. நே. லாவண்யன் - தாவடி இ.த.க.பாடசாலை
105. சி. பிருந்தினி - கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
106. சி. சுஜீபனா - அச்சுவேலி மத்திய கல்லூரி
107. பி. அனுதர்ஷன் - கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
108. த. சர்மிலன் - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
109. ஜெ. நிரோஜினா - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம
110. செ. அருள்ராஜ் - கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
111. க. அனுசியன் - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
112. மு. நிரோஜா - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
113. எஸ். மதரூபன் - நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்
114. த. ரூசிகா - இணுவில் மத்திய கல்லூரி
115. வி. பிறேமிலா - தேவரையாளி இந்துக் கல்லூரி
116. கு. சிரஞ்சீவன் - சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
117. கீ. அச்சுதன் - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
118. க. சிந்துஜன் - துன்னாலை மெ.மி.த.க.பாடசாலை
119. யோ. பிரிந்தா - வரணி மகாவித்தியாலயம்
120. தெ. வினோஜ்காந் - யா/ மத்திய கல்லூரி
121. தி. அருந்தஷா - கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி
122. த. பாலசேனானி - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
123. சி. லக்ஷாயினி - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
124. சி. வாதுசா - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
125. நா. நளாயினி - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
126. க. சகாதேவன் - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
127. சி. சேர்ஜன் - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
128. மா. ஸ்ரெலா - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
129. ர. ராஜ்மோகன் - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
130. சி. வர்ணன் - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
131. யோ. சிந்துஜா - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
132. இ. மிதுஷ்ன் - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
133. இ. நிரேச்குமார் - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
134. க. நிறோசன் - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
135. கா. கஜீபன் - நல்லூர் விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

## குரங்கு பாஞ்சான் விவகாரத்திலிருந்து க.கா.குழுவிலகல்...




### வினாத்தாள் 28-ன்விடைகள்

01. உள்ளம்
02. செல்வம்
03. மகிழ்ச்சி
04. உலகு
05. மறதி
06. கெட்டது
07. நனவு
08. சிறுமை
09. **Thinks**
10. **Hand**
11. **World**
12. **Good**
13. மனம்
14. இனிமை
15. பெருமை
16. வாக்கு/சொல்
17. வாழைப்பழம்
18. ஆகாயவிமானம்
19. கண்விழி
20. மரவேர்
21. கடல்+கரை
22. கல்+வீடு
23. கடல்+அலை
24. தாமரை+பூ

25. (3) 26. (2) 27. (3)
28. (2) 29. (1) 30. (1)
31. மேலாக 32. - 33. (3)
34. (2) 35.- (3)

36. திங்கள்
37. கம்மாலை
38. சித்திரம்
39. சாம்பசிவம்
40 குமரன்
41. பிரபாகர்
42. 1மணி 05 நிமிடங்கள்
43. 4 நிமிடங்கள்
44. அட்டை
45 தாமரை
46. பூவால்
47. வளர்ச்சியடையாமை
48. வெங்காயம்
49. உணவை அழுக்காக்குதல்
50 குற்றுதல்/நோய் பரப்பல்
51. உணவை மூடி வைத்தல்
52. நுளம்புவலை உபயோகித்தல் நுளம்புத்திரி
53. வயிற்றோட்டம்
54. மலேரியா/ஆனைக்கால்
55. நிலத்தை கிளறுதல்
56. தேன்/பூக்கள் காயாக உதவல்
57. பூக்கள் காயாக உதவல்
58. கருவாடு/வாழைப்பழம்

| | பொருட்கள் | அளவு Kg | ரூபா g 320 | சதம் 00 |
|---|---|---|---|---|
| 59 | அரிசி | 10 | 00 10 | 50 |
| 60 | பருப்பு | | 250g 337 | 50 |
| 61 | செ.மிளகாய் | 2 | 250g 3 | 00 |
| 62 | கோவா | 2 | 125 60 | 00 |
| 63 | சீனி | 2 | | |
| 64 | மொத்தம் | | 65 733 | 00 |
| 65 | | | | |

66. ரூபா எழுநூற்று முப்பத்து மூன்று ரூபா
67. ரூபா 17.00
68. ரூபா 750/-
69. கடும் மழையினால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது
70. இயற்கையாக
71. விண்-பூமி தண்மை- வெம்மை
72. **Circle**
73. **Triangle**
74. **Square**
75. **Rectangle**
76. -81. வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான எழுவாய், பயனிலையுடன் அமைந்த ஆறு வாக்கியங்கள் எழுதப்படல் வேண்டும. ஒவ்வொரு வாக்கியமும் ஆகக் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.


## கேள்வி அறிவித்தல்...

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப் படிவத்தில் இருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு கிழக்கு சமூக மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD), 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை (தொலைபேசி இல. 026-222 7434, தொலை நகரி 026-222 7401, மின்னஞ்சல்: necord@sltnet.lk) என்ற விலாசத்தில் உள்ள திட்டப் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

6. கேள்வி ஆவணங்களை 20.08.2003 லிருந்து 01.09.2003 வரை காலை 9.30இலிருந்து பிற்பகல் 03.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்தில் இருந்து இது தொடர்பாக மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா ஆயிரத்தை (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்திக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

7. கேள்வி கோருவோர் முன்பகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாகப் பந்தி 8இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. பொறிவைத்த கேள்விகள் தலைவர், திட்ட கேள்விச் சபை, NECORD, 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலைக்கு 04.09.2003 மாலை 2 மணிக்கு முன்பாகக் கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

9. முன்கூட்டியே கேள்வி கோருவோர் கூட்டம் ஒன்று 29.08.2003 அன்று மாலை 2.00 மணிக்கு மேற்படி அலுவலகத்தில் நடைபெறும்.


10. கேள்விகளின் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**த.லங்காநேசன்**
*வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு,*
*அபிவிருத்தித்திட்ட கேள்விச் சபைத் தலைவர்*
*140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை.* (சி-6573)

# பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய

## ரதோற்சவ சிறப்பு மலர் - 20.08.2003





### தேவஸ்தான பிரதம குருவின் அருளாசியுரை



நாம் விழித்திருந் தாலும், உறங்கினா லும், என்ன செய் தாலும் நம்முடன் இருக்கும் துணை ஒன்று உண்டு. நான் துணை செய்கிறேன் எனச் சொல்லாமல், நம் கண்ணுக்குத் தெரியாமல் ''தோன்றாத் துணையாகி இருந்தான்தாள் அடியோர் களுக்கே'' என அப்பர் பெரு மானின் திருவாக்குப்படி பொன்னாலையெம்ப தியில் பழம் பெருமைகளுடன் வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஸ்ரீவரதராஜப் பெரு மானின் பேரருள் திறம்பெருமை மிக்கது. ''நம்பினோர்க்கு நலம் விளை விப்பவன்

### ஈழத்தமிழரின் தீர்வை பெற்றுவர தேரேறிச்செல்

பொன்னாமையாய் அவதரித்து பொன்னாலையில் அருள்பவனே தேரேறிச் செல்
பூமகளின் நாயகனாய்ப் பூலோகம் ஆளவந்தவனே தேரேறிச் செல்
மண்ணை உண்டவனே மாயனே மாதவனே தேரேறிச் செல்
மானுடத்தின் மயக்கம் தீர்த்து கீதை அருள தேரேறிச் செல்
உன்னைத் தூதுவனாய் அனுப்புகிறோம் தேரேறிச் செல்
உகந்த உரிமைதனைப் பெற்றுவர தேரேறிச் செல்
நின்னை நம்பிவிட்டோம் நெடுமாலே தேரேறிச் செல்
நிரந்தரமாய் எமக்குரிய தீர்வைப் பெற்றுவர தேரேறிச் செல்

முகூர்த்தம் நெருங்கி வருகுது முகுந்தனே தேரேறிச் செல்
முடிவை ஈழத்தமிழருக்கு நன்றே அமைத்திட தேரேறிச் செல்
பார்த்த கண்களும் பூத்ததே பார்த்தனே தேரேறிச் செல்
பாங்கான நல்வாழ்வுக்கு வழிகாட்டிட தேரேறிச் செல்
நேர்த்திகள் ஆயிரம் வைத்தோம் மாயனே தேரேறிச் செல்
நிரந்தரத் தீர்வினை ஈழத் தமிழருக்குத் தர தேரேறிச் செல்

### தர்மகர்த்தா சபைத் தலைவரின் வாழ்த்துரை

வடஇலங்கையில் பிரசித்தி பெற்று விளங்கும் விஷ்ணு ஆலயங்களுள் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆல யமும் ஒன்று. அருள்வளம் நிறைந்து விளங்கும் இவ்வாலயம் தேவேந்திரனுக்குச் சாப விமோ சனம் வழங்க முன்னொரு போது நாரணன் பொன்னா மையாக அவதரித்ததால் தோன்றியது என்று தட்சிண

தாலும் நம்முடன் இருக்கும் துணை ஒன்று உண்டு. நான் துணை செய்கிறேன் எனச் சொல்லாமல், நம் கண்ணுக்குத் தெரியாமல் ''தோன்றாத் துணையாகி இருந்தான்தாள் அடியோர் களுக்கே'' என அப்பர் பெரு மானின் திருவாக்குப்படி பொன்னாலையெம்ப தியில் பழம் பெருமைகளுடன் வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஸ்ரீவரதராஜப் பெரு மானின் பேரருள் திறம்பெருமை மிக்கது. ''நம்பினோர்க்கு நலம் விளை விப்பவன் நாராயணன், இவ்வாலயத்தில் வருடந் தோறும் ஆவணி மாதத்தின் கிருஷ்ண பட்ச அட்டமித் திதியும், ரோஹிணி நட்சத் திரமும் சேரும் கிருஷ்ண ஜெயந்தி தினத்தை ரதோற்சவ நாளாகக் கொண்டு முன்வரும் 16 நாட்களும் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. இன்று தேரேறி வரும் எம்பெருமானின் நல்லருள் எல் லோருக்கும் பெருக எனது அருளாசி களை வழங்குகின்றேன்.

சிவாகம கிரியா சிரோமணி ''கிரியாபானு''
சிவப் பிரம்ம ஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்
(மகோற்சவ பிரதம குரு)

உன்னைத் தூதுவனாய் அனுப்புகிறோம் தேரேறிச் செல்
உகந்த உரிமைதனைப் பெற்றுவர தேரேறிச் செல்
நின்னை நம்பிவிட்டோம் நெடுமாலே தேரேறிச் செல்
நிரந்தரமாய் எமக்குரிய தீர்வைப் பெற்றுவர தேரேறிச் செல்

முகூர்த்தம் நெருங்கி வருகுது முகுந்தனே தேரேறிச் செல்
முடிவை ஈழத்தமிழருக்கு நன்றே அமைத்திட தேரேறிச் செல்
பார்த்த கண்களும் பூத்ததே பார்த்தனே தேரேறிச் செல்
பாங்கான நல்வாழ்வுக்கு வழிகாட்டிட தேரேறிச் செல்
நேர்த்திகள் ஆயிரம் வைத்தோம் மாயனே தேரேறிச் செல்
நிரந்தரத் தீர்வினை ஈழத் தமிழருக்குத் தர தேரேறிச் செல்
பூர்வீகமான தமிழினத்தை தாயகத்தைக் காத்திட தேரேறிச் செல்
புதுயுகமாய் இத்தேசம் மலர புருசோத்தமா தேரேறிச் செல்

பாண்டவர்க்குத் தூதுசென்ற பாண்டுரங்கா தேரேறிச் செல்
பாஞ்சாலி துயர்தீர்த்த பரந்தாமனே தேரேறிச் செல்
நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றிட தேரேறிச் செல்
நினைத்ததை நிறைவேற்றும் வேங்கடேசா தேரேறிச் செல்
வேண்டிடும் தீர்வு விரும்பிடும் சமாதானம் சேர்த்திட தேரேறிச் செல்
வெற்றியைப் பெருக்கி விடிவினைப் படைக்க தேரேறிச் செல்
ஆண்டிடு எம்மைநீ அழகிய இலங்கைத் தீவினில் கண்ணனே
அன்பனே! தமிழர் நெஞ்சினில் வாழும் வைகுந்த வாசனே தேரேறிச் செல்

கவிமாமணி மதுரகவி. காரை எம்.பி.அருளானந்தம்

ஆலயங்களுள் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆல யமும் ஒன்று. அருள்வளம் நிறைந்து விளங்கும் இவ்வாலயம் தேவேந்திரனுக்குச் சாப விமோ சனம் வழங்க முன்னொரு போது நாரணன் பொன்னா மையாக அவதரித்ததால் தோன்றியது என்று தட்சிண கைலாச புராணம் உரைக்கும். இத்தகு பெருமைமிக்க வரதரா ஜப் பெருமானின் தேர்த்திரு விழா இன்று சிறப்பாக நடை பெறுகின்றது. தேரேறி பெரு மாள் எல்லா மக்களுக்கும் நல்லருள் பெருக்க வேண்டு மெனவும், நாட்டில் சமாதான வாழ்வு மலரவேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

சி.கயிலைநாதன்
(தலைவர் . தர்மகர்த்தா சபை)

## பொன்னாலை வரதராஜப் பெருமாளின் ரதோற்சவ விழா சிறக்க வாழ்த்துவோர்:-


''நாரணனே தேரேறி வருக!''
**வரதலக்ஷ்மி வெதுப்பகம்**
காளுவன் சந்தி , சுழிபுரம்.

''சமாதானத் தூதுவனாய் தேரேறி வருக!''
**ஸ்ரீ வரதராசா வெதுப்பகம்**
ஸ்ரீ ராம் அங்காடி,
வழக்கம்பரை தொல்புரம்.

''பசுமேய்க்க வந்தவனே தேரேறி வருக!''
**சுரேஸ் சவுண்ஸ் அமைப்பகம்**
தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

''ஆலிலையில் பள்ளிகொண்ட அரங்கனே தேரேறி வருக!''
**சித்தி விநாயகர் வர்த்தக நிலையம்**
பிள்ளையார் கோவிலடி, மூளாய்.

''மாரிதடுக்க மலையெடுத்தவனே தேரேறி வருக!''
**நல்லதம்பி ஸ்ரோர்ஸ்**
மூளாய் வீதி, மூளாய்.

''புல்லாங்குழல் ஊதும் புருஷோத்தமா தேரேறி வருக!''
**திரு.ஆர்.சிவகுமார்**
(நாதஸ்வரக் கலைஞர்)
வழக்கம்பரை, தொல்புரம்.

''பாரதத்தைப் புரியவைத்த பரந்தாமா தேரேறி வருக!''
**வாசுதேவலிங்கம் முத்தழகன்**
பண்ணாகம், சுழிபுரம்.

''ஞாலமெலாம் நிறைந்தவனே தேரேறி வருக!''
**சுந்தர்சன்**
மத்திய சந்தை,
மானிப்பாய்.

''பாண்டவருக்குத் தூது சென்றவனே தேரேறி வருக!''
**மதனா ஜுவல்லறி** (தங்கப்பவுண் வியாபாரம்)
177/3 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

''திரௌபதிக்குச் சேலை கொடுத்தவனே தேரேறி வருக!''
**இளவரசி சேலைச் சோலை**
(பட்டுப் புடவைகளின் சாம்ராஜ்யம்)
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

''தேவேந்திரனின் சாபம் தீர்த்தவனே தேரேறி வருக!''
**க.செ.கைலாசபிள்ளை அன் சன்ஸ்**
(மருந்துச் சரக்கு வியாபாரம்)
76, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

''தீர்வுகொண்டு கண்ணா தேரேறி வருக!''
**ஐடியல் கிறீம் ஹவுஸ்**
458, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0777-110215

''தேவதேவே தேரேறிவந்து தீர்வு தருக!''
**யாழ். காலணியகம்** (பாட்டா ஏஜென்சி)
11, நவீனசந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


**மலர் அமைப்பு:- ஆராதனன்**

## இன்று ஒரு தகவல்

# நிற வைத்தியம்

கண்ணுக்கு அழகிய நிறங்களில் பூக்கள் மலர்ந்திருக்கின்றன. ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு நிறம் பிடிக்கும். இருந்தாலும் எல்லா நிறமும் அழகுதான். நிறங்களைப்பற்றிச் சில விபரங்கள் உள்ளன. ஒவ்வொரு நிறமும் சும்மா இருப்பதில்லை. எதையாவது செய்து கொண்டு தான் இருக்கின்றன. ஒரு கார் பார்ப்பதற்கு நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக அதன் மீது வர்ணம் பூசுகின்றனர். ஆனால் காரின் நிறத்திற்கும் விபத்திற்கும் தொடர்பிருப்பதாக ஒரு கண்டுபிடிப்பு கூறுகின்றது.

இங்கிலாந்தில் சமீபத்தில் இது பற்றிய ஓர் ஆய்வு நடந்துள்ளது. சிவப்பு நிறமும், சாம்பல் நிறமும் உள்ள கார்கள் தான் அடிக்கடி விபத்தில் மாட்டிக்கொள்கின்றனவாம். மஞ்சள் நிறக் கார் எப்படித்தெரியுமா? பகல் நேரத்தில் விபத்தில் சிக்குவதில்லையாம். மாலை நேரத்திலும் இரவு நேரத்திலும் தான் விபத்தில் மாட்டிக்கொள்ளுமாம்.

சரி! எந்த நிறத்திலுள்ள கார் விபத்தில் அதிகம் சிக்காமல் உள்ளது? பிறவுண் நிறக் கார்தானாம். சார்... இதற்காக கார் வைத்திருப்பவர்கள் பெயின்ரைச் சுரண்ட ஆரம்பித்து விடாதீர்கள் நிறத்தை மாற்றுவதற்கு! இப்போது நான் கூறியது இங்கிலாந்தில் எடுத்த புள்ளி விபரம். இங்கே எப்படி என்று இனித்தான் பார்க்கவேண்டும். நிறம்தான் விபத்திற்குக் காரணம் என்று அவற்றை வெறுக்க ஆரம்பித்து விடாதீர்கள். ஏனென்றால் வண்ணங்கள் நமது உடலில் உள்ள பல வியாதிகளைத் தீர்க்க உதவுகின்றனவாம்!

சூரிய கதிரில் 7 நிறங்கள் இருப்பது போல் நமது உடலில் 7 நிறங்கள் உள்ளன. அவை கூடினாலோ அல்லது குறைந்தாலோ உடலில் சில கோளாறுகள் வந்துவிடும். இதனைச் சரிப்படுத்தும் சிகிச்சை முறைக்குத்தான் ஆங்கிலத்தில் ''குரோமா தெரபி''என்று பெயர். வெள்ளைக்காரர்கள் சிலர் சுகமாக வெயிலில் படுத்திருப்பார்கள். என்னவென்று கேட்டால் I am Taking Sun Bath என்பார்கள். வெயிலில் குளிக்கின்றனராம். இயற்கை வைத்தியம் இது.

சரி! 7 நிறங்களுக்கும் என்னென்ன குணம் தெரியுமா? சிவப்பு நிறம் உடலுக்கு வெப்பத்தைக் கொடுக்கின்றது. என்புருக்கி, நீரிழிவு, மஞ்சள்காமாலை, சொறி சிரங்கு போன்றவற்றை இது நீக்கும். நீல நிறம் இருமல், இளைப்பு, வாதம், மூட்டுப்பிடிப்பு போன்றவற்றைக் கட்டுப்படுத்தும். ஊதா நிறம் இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களைப் பெருக்கும். நரம்புகளுக்கு அமைதியைக் கொடுக்கும். கரு நீல நிறம் சுவாசம் தொடர்பான கோளாறுகளையும், மலச் சிக்கலையும் நீக்கும். ஆரஞ்சு நிறம் இரத்த அபிவிருத்தி செய்கின்றது. நரம்பு தொடர்பான நோய்களைப் போக்குகின்றது. பச்சை நிறம் கண்ணின் ஒளியைப் பெருக்குகின்றது. கருப்பைக் கோளாறுகளைப் போக்கி, தாது பலத்தை உண்டாக்குகின்றது. மஞ்சள் நிறம் மலச்சிக்கலை நீக்குகின்றது. இந்த நிறத்தை அளவோடு பயன்படுத்த வேண்டும்.

சரி! சூரிய ஒளியில் 7 நிறங்கள் உள்ளன. நாம் எப்படி அவற்றைப் பயன்படுத்துவது? சூரிய ஒளியிலிருந்து கிடைக்கும் நிறங்களை நீரில் இறக்கி அந்த நீரை மருந்தாகக் கொடுக்கலாம். எண்ணெய் மூலமாகவும் இந்த நிறங்களை உடலில் தேய்த்துக்கொள்ளலாம். நல்லெண்ணெய், கடுகு எண்ணெய், ஆளி விதை எண்ணெய் போன்றவற்றில் இந்த நிறங்களை பக்குவமாக இறக்கலாம்.

சரி! சூரிய கதிர்களைத் தண்ணீரிலோ, எண்ணெயிலோ எப்படி வடித்தெடுப்பது? எந்த நிறம் வேண்டுமோ அந்த நிறத்தில் உள்ள கண்ணாடிப்போத்தலை எடுத்துக்கொள்ளுங்கள். அதில் கிணற்றுநீரை அல்லது மழைநீரை நிரப்பி ஒரு வாரம் வெயிலில் வையுங்கள். அவசரமென்றால் இரண்டு நாட்களாவது வைக்கலாம். வெயில் இல்லாத நேரம் என்றால் 40வோட்ஸ் மின் விளக்கில் நிறப் பேப்பர் அல்லது நிறமான துணியைக் கட்டுங்கள். அந்த வெளிச்சம் போத்தல் நீரில் படுமாறு வையுங்கள்.

இன்னுமோர் முறையும் இதற்கு உண்டு. பெரிய மரப் பெட்டியில் நிறக்கண்ணாடிகளைப் பதிக்கவேண்டும். பல நிறங்களில் பட்டுத்துணிகளையும் கட்டி வைக்கலாம். பின்பு அந்தப் பெட்டிக்குள்ளே சென்று கொஞ்ச நேரம் உட்கார்ந்து கொள்ளுங்கள் அது போதும். எண்ணெயை சூரிய ஸ்புடம் போட்டு உபயோகப்படுத்தலாம்.

இந்த நிறங்களை பாலில் இறக்கலாம். சர்க்கரைத்தூளில் இறக்கி அவற்றை மருந்தாக உட்கொள்ளலாம். பல நிறப்போத்தல்களை அதற்குப் பயன்படுத்தலாம். இயற்கை வைத்தியம் என்ன கூறுகின்றது தெரியுமா? மனிதனுக்கு வரும் சில நோய்களை சூரிய ஒளியில் உள்ள சில நிறங்கள் குணப்படுத்துகின்றது எனக் கூறுகின்றது. இயற்கை வைத்தியரிடம் சென்றால் இதனை ஒழுங்காகக் கூறுவார்கள்.

நான் ஒரு குரோமோதெரபி அதாவது நிற வைத்தியம் கூறுகின்றேன் செய்து பார்த்துவிட்டு அதன் பலனைக் கூறுங்கள் . குடும்பத்தில் எவ்வளவோ தொல்லைகள் ,குழப்பங்கள் இருக்கலாம். அதற்கும் ஒரு நிற வைத்தியம் உண்டு. அதாவது உங்கள் மனைவிக்குப் பிடித்த நிறத்தில் ஆடை, பிடித்த நிறத்தில் பூ போன்றவற்றை வாங்கிக்கொண்டு போய் கொடுங்கள். உடனடியாகப் பலன் தெரியும்!

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# முஸ்லிம் இளைஞர் படுகொலை குறித்து திறந்த மனதுடன் விசாரணை

## பொலிஸ்மா அதிபர் உத்தரவு

(லண்டன்)

சம்மாந்துறையில் கடந்த 17ஆம் திகதி இரு முஸ்லிம் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் குறித்து திறந்த மனதுடன் விசாரணைகளை நடத்துமாறு தாம் சம்பந்தப்பட்ட பகுதிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

அண்மையில் மூதூரில் முஸ்லிம் மீனவர்கள் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டமை பற்றியும், சம்மாந்துறையில் கடந்த 17ஆம்திகதி இரு முஸ்லிம் விவசாயிகள் கொல்லப்பட்டமை குறித்தும் அரசு எந்தவித அக்கறையும் காட்டவில்லையென முஸ்லிம்கள் தரப்பில் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், இச்சம்பவம் குறித்து பொலிஸார் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் என்னவென்பது பற்றி பி.பி.சி தமிழ்ச் சேவைக்கு விளக்கமளிக்கையிலேயே ஆனந்தராஜா இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாறான கடத்தல் சம்பவங்கள், கொலை என்பன அடிக்கடி நடைபெற்று வருகின்றன.

இச்சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரும் தம்மாலான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மூதூர் மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே அடிக்கடி முறுகல் நிலை ஏற்படும்போது அவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸார் ஊரடங்கு உத்தரவினைப் பிறப்பித்து கலவரங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பார்கள்.

தற்போது கூட சம்மாந்துறைப் பகுதியில் போதிய அளவு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உதவியாக இராணுவத்தினரும் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும்,சம்மாந்துறையில் நடைபெற்ற சம்பவங்கள் போன்று இனியும் இடம்பெறாதிருக்க பொலிஸார் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

எனவே, இது விடயத்தில் பொது மக்கள் எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை .பொது மக்களுக்குத் தேவையான பாதுகாப்பு வழங்கப்படும்.

அத்துடன். இவ்வாறான சம்பவங்கள் நடைபெறும பட்சத்தில் அது குறித்து பொலிஸாருக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

பொலிஸார் அது குறித்து கவனம் செலுத்துவர் என்றார். (உ10)

# தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு அதிபர் பதவிகள் வழங்கப்படும்

(கோட்டை)

34 தேசிய பாடசாலைகளில் அதிபர் பதவிகளில் பணிபுரிந்து வரும் தகுதியற்ற அதிபர்களின் இடங்களுக்கு தகுதிவாய்ந்த ஆசிரியர்களை அடுத்தமாதம் முதல் கல்வி அமைச்சு நியமிக்கவிருக்கிறது.

சகல பாடசாலைகளிலும் சம நிலையைப் பேணுவதற்கு நாம் நடவடிக்கை எடுக்க விரும்புகிறோம் என்று கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.தேசிய பாடசாலைகளில் முதலில் ஆரம்பிக்கப்படவிருக்கும் இந்தச் செயற்பாடு பின்னர் மாகாண சபைகளின் கீழ் உள்ள பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக இப்பொழுது அகில இலங்கை அதிபர்கள் சேவை யூனியன் ஆராய்ந்து வருகின்றது. இதன் அறிக்கை அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அறிக்கை கிடைத்ததன் பின்னர் புதிய சீர் திருத்தங்களை அறிமுகப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மீள் பயிற்சி அளிப்பதற்குச் செலவுகள் அதிகம் என்பதால் தகுதி அற்ற நிலையில் அதிபர்களாக இருந்து வருகின்றவர்களை மீளவும் ஆசிரியப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டு தகுதியுள்ள ஆசிரியர்களை அதிபர்களாக பதவி உயர்த்துவதற்கு கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

அகில இலங்கை அதிபர்கள் யூனியன் கருத்துப்படி இப்பொழுது பணியில் இருக்கும் அதிபர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் தகுதியற்ற நிலையில் உள்ளவர்கள் என்று கருதப்பட முடியும். இவர்களில் சிலருக்கு குறைந்த பட்ச தகுதியும் இல்லை. ஆனால் அரசியல் செல்வாக்கின் காரணமாகப் பதவிகளில் இருந்து வருகிறார்கள். (பி)

## இராசி பலன்

**20. 08. 2003**
**(ஆவணி ~3,புதன்)**

அட்டமி~ மு. இ 7.17வரை
கார்த்திகை - மு.இ 9.31 வரை
இராகுகாலம் - 12.05-1.35
சுபநேரம் - 4.35-6.05
கார்த்திகை விரதம்,
கிருஷ்ண ஜெயந்தி

**மேடம்**
மாதர் நட்பு, கௌரவக்குறைவு, காரிய தாமதம், கடும் வார்த்தை.

**இடபம்**
நண்பர்கள் உதவி, நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம்.

**மிதுனம்**
பிதா சிந்தை, பண விரயம், கோபப்படுதல், முயற்சி தாமதம்.

**கடகம்**
தெய்வசிந்தை, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம், வாக்கு வன்மை.

**சிங்கம்**
உற்சாகம், கடின உழைப்பு, சுபநிகழ்வு, காரிய சிந்தை.

**கன்னி**
ஆன்றோரால் மதிக்கப்படுதல், அச்சமான நிலை, முயற்சி தாமதம், பிரயாணம்.

**துலாம்**
பிறருக்கு உதவுதல், எதிர்பாராத நன்மை, பிரயாண பயம், உடல் சோர்வு.

**விருச்சிகம்**
திடீர்பயணம், அபூர்வ சந்திப்பு, காரிய அனுகூலம், புதிய திருப்பம்.

**தனுசு**
செய்தொழில் முன்னேற்றம், பகைவரால் நன்மை, சுகவாழ்வு, சகோதரர் உதவி.

**மகரம்**
வியாபார நன்மை, காரிய இடையூறு குடும்பக்கவலை, கௌரவக்குறைவு.

**கும்பம்**
கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், எதிர்பாராத நன்மை, சிந்தனை மிகுதி.

**மீனம்**
வாக்கு மேன்மை, புதிய பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம்,பிறர் உதவி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

## வழமைபோல் இம்முறையும்

# நல்லூர் ஆலய தேரை ஒட்டி பஜனைப் பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய தேர் உற்சவத்தை ஒட்டி ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் நல்லூர்ப் பயனை பாதயாத்திரை இம்முறையும் வழமைபோல் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை நயினை ஸ்ரீ நாகபூசணி ஆலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் மாலைப் பூசை வழிபாட்டினைத் தொடர்ந்து திருமுறைப் பஜனை நடைபெறுவதுடன், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை வேல்பூசையுடன் பஜனைப் பக்திப்பாதயாத்திரை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து குறிகாட்டுவான் மனோன்மணி அம்பாள் ஆலயம், புங்குடுதீவு அரியநாயகன் புலம் விநாயகர் ஆலயம்,இறுப்பிட்டி விநாயகர் ஆலயம். காளிகாபரமேஸ்வரி ஆலயம், ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம், ஆதி வைரவர் ஆலயம். தென் பெருந்துறை சிவன் ஆலயம் ஆகியவற்றை தரிசித்து கிராஞ்சி மீனாட்சி சுந்தரேசர் ஆலயத்தைச் சென்றடையும்.

மறுநாள் கிராஞ்சி கந்தன் ஆலயம், மடத்துவெளி முருகன் விநாயகர் ஆலயம், வேலணை முருகன், ஐயனார் ஆலயம், வங்களாவடி முருகன் ஆலயம், சாட்டி கெட்டிப் புலம் ஐயனார் ஆலயம், மண்கும்பான் விநாயகர் ஆலயம், யாழ். கோட்டை முனீஸ்வரர் ஆலயம், யாழ். பஸ்நிலைய வைரவர் ஆலயம், சத்திரத்துச் சந்தி வைரவர் ஆலயம், நாவாந்துறை நாகபூசணி ஆலயம், வைரவர் ஆலயம் ஆகியவற்றை தரிசித்து வில்லூன்றி விநாயகர் ஆலயத்தைச் சென்றடையும்.

பின்னர் நல்லூர் தேர் உற்சவ நாளான 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை ஸ்ரீநிவாசகம் வீதியூடாகப் பாதயாத்திரை ஆரம்பமாகி கந்தர்மடம் சிவஉதய நாகபூசணி ஆலயத்தினைத் தரிசித்து அரசடிவீதியூடாக நல்லூர் ஆலயத்தைச் சென்றடையும். (உ-10)

# தரம் 10, 11 மாணவர்களின் பாட விதானத்தில் புதிய கற்கை

(கொழும்பு)

தேசிய கல்வி நிறுவகம் பாடசாலை பாடவிதானத்தில் புதிய பாடமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளது.

பொறிமுறை வடிவமைப்பும் தொழில்நுட்பமும், உணவு தயாரித்தலும் ஆடை வடிவமைப்பும், மின்சாரமும் இலத்திரனியலும், வீட்டுத்தோட்ட அமைப்பு, கட்டடத் .தொழில்நுட்ப அமைப்பு,அலங்காரப் பொருள் வடிவமைப்பு என்ற அம்சங்களை உள்ளடக்கியதாக இப்பாடம் அமைந்திருக்கும்.

2006ஆம் ஆண்டில் 10, 11ஆம் தரங்களில் இப்பாடம் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

10ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் இவற்றில் 2 அம்சங்களையும், 11ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் ஒரு அம்சத்தையும் தெரிவுசெய்ய வேண்டும். (தி)

## மொறட்டுவ பல்கலைக்கழக பரீட்சை ஒத்திவைப்பு

(மொறட்டுவ)

மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால், எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்த என்.டி.ரி. அனுமதிக்கான தகுதிகாண் பரீட்சை மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என மொறட்டுவ பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் டி.எஸ்.விஜயசேகர அறிவித்துள்ளார். (உ)

மாநகராட்சி மன்ற யாழ்ப்பா

வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு
- குறள்

## வலம்புரி

### பல்கலைக் கழக வேலை நிறுத்தம்

நாட்டிலுள்ள சகல பல்கலைக் கழகங்களினதும் கல்வி சாரா ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரை கடந்தகாலப் பகுதியில் அடிக்கடி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட நிறுவனங்கள் குறித்து ஓர் ஆய்வினை மேற்கொண்டால் அதில் பல்கலைக் கழகத்தின் கல்வி சாரா ஊழியர்களே முதல் இடத்தைப் பெறுவர். அந்த அளவு தூரம் இலங்கைப் பல்கலைக் கழக ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்ந்து செல்கின்றது. பல்கலைக் கழக ஊழியர்களின் கோரிக்கைகள் நியாயமானவையாக இருப்பினும்,அக் கோரிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வேலை நிறுத்தம் தான் ஒரேவழி என்றால், அது பல்கலைக் கழக கல்வி சாரா ஊழியர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தொழிற் சங்கங்களின் பொறுப்பற்ற செயலாகவே கருதப்படும்.

இலங்கையைப் பொறுத்தவரை வேலை இன்மை என்பது மிகப் பெரிய பிரச்சினையாகவுள்ளது. இந் நிலையில் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது எவ்வகையிலும் பொருத்துடையதல்ல.

பல்கலைக் கழக கல்வி சாரா ஊழியர்களைப் பொறுத்தவரை ஏனைய ஊழியர்களுடன் ஒப்பிடுகையில் அவர்களின் சம்பள அளவு திருப்பதியானதென்றே கொள்ள வேண்டும். அதற்கு மேலாக பல்கலைக்கழக ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பெரிதும் பாதிப்படைவதுடன் அவர்களின் எதிர் காலமும் வீணடிக்கப்படுகின்றது.

குறிப்பாக பல்கலைக்கழகத்தில் கற்கும் மாணவர்கள் உழைக்கும் வர்க்கத்திற்குள் அடங்குபவர்கள், அவர்கள் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதால் அவர்கள் தமது உழைப்பை தியாகம் செய்ய வேண்டியுள்ளது. இந் நிலையில், பல்கலைக் கழக ஊழியர்கள் பொறுப்பற்ற முறையில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதால் மாணவர்கள் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் காலப் பகுதி நீண்டு செல்கிறது. இதனால் மாணவர்கள் மத்தியில் ஓர் விரக்தி நிலை ஏற்படுவதோடு மாணவர்களின் நடத்தையிலும் மாற்றங்கள் ஏற்பட வழி வகுத்து விடுகிறது.

அதேவேளை, தென்னிலங்கைப் பல்கலைக் கழக ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள் என்பதற்காக யாழ்.பல்கலைக் கழக ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது எவ்வகையிலும் நியாயமாகாது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரை யுத்த சூழ்நிலையால் கல்வி ஆண்டுகள் பின்தள்ளப்பட்டுள்ளது.இந் நிலையில் ஊழியர்களின் வேலை நிறுத்தம் மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் யாழ். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் தங்கள் வேலை நிறுத்தம் பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

# மானுடராய் மண்ணில் பிறந்த மாயன் கிருஷ்ணன் செய்த ஜாலம்

மகா விஷ்ணுவானவர் மக்களைக் காப்பதற்காக ஒன்பது அவதாரங்களை எடுத்து அருளினார். அவற்றில் இரண்டு மனித அவதாரம் ஆகும். ஒன்று ஸ்ரீராம அவதாரம். மற்றது கிருஷ்ண அவதாரம். சாதாரண மனிதர்கள் படும் வேதனை துன்பமடைந்து மக்களோடு ஒன்றாக வாழ்ந்து மனித குலத்துக்கு மாபெரும போதனையாகக் கீதையை உபதேசத்து பசு மாடுகளை மேய்த்து பாண்டவர் சகாயனாகப் பாரதப் போரை நடத்தி சாரதியாகவும் நின்று எல்லோர் மனத்திலும் உட்புகுந்து வாழ்ந்து வைகுந்தமாகிய ஸ்ரீமத் நாராயணனனார்.

அரக்க மன்னனின் கம்சனின் சிறையிலே ஆவணி மாதத்து அபர பக்கத்து அட்டமி நன்நாளில் ரோகினி நட்சத்திரத்தில் நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு தேவகி வயிற்றில் தெய்வாம்சம் பொருந்திய மானுடப் பாலகன் கண்ணன் பிறந்தான். பிறந்த உடனேயே தந்தை வசுதேவர் இறைவன் ஆணைப்படி ஆயர்பாடியிலுள்ள யசோதை வீட்டில் கண்ணனைக் கொண்டு போய் சேர்த்ததுடன் யசோதையின் பிள்ளையை தான் எடுத்துச் சென்றார். தான் பெற்ற பிள்ளையை வசுதேவர் எடுத்துச் சென்றதை அறியாத யசோதை யானவள் காலையில் கண்விழித்ததும் தன் அருகில் இருந்த ஆண் குழந்தையைத் தான் பெற்றது இந்தக் குழந்தை இல்லை என்பதை அறியாமலே தன் குழந்தை என்று வளர்த்தாள். வசுதேவரின் ஏழு மனைவியரில் ஒருத்தியான ரோகினி என்பவள் பெற்ற பிள்ளை ஆதிசேடனன் அம்சமாகிய வெண்மை நிறமான பலராமன் ஆவார்.

ஆயர்பாடியிலே கண்ணனும் அண்ணன் பலராமனும் இணை பிரியாத நண்பர்கள் போல் வளர்ந்தனர். சிறையில் தேவகியின் ஏழாவது கருவானது கலைந்த போது இறையாணைப்படி யோக மாயையானவள் அந்தக் கருவை ஏந்தி ரோகினியின் வயிற்றிலே சேர்த்து விட்டாள். எனவே பல ராமன் கண்ணனுக்கு அண்ணன் தான்.

சிறு வயதிலே கண்ணன் மண்ணைத் தன்றபோது தாயார் யசோதை ஒரு சிறிய தடியை எடுத்து அவனை அடிப்பது போல் தடியை ஓங்கி வெருட்டி வாயைக் காட்டுமாறு கூற பாலகன் கண்ணனும் வாயைத் திறக்க என்னே அதிசயம்! சிறு வாயினுள உலகத்தையே யசோதை கண்டாள்.

பூதகி என்னும் அரக்கி கம்சனின் ஏவலின்படி மானுடப் பெண்ணாக வடிவம் எடுத்து வந்து குழந்தை



கண்ணனை மடியில் வைத்து பால் கொடுத்தாள். பாலிலே நஞ்சு உண்டாகும்படி மாயம் செய்தாள். ஆனால் குழந்தை கண்ணனோ பூதகியின் மார்பிலே பாலையும் அத்தோடு அவளது உயிரையும் குடித்து விட்டான். வெளியே சென்றிருந்த யசோதை திரும்பி வந்தபோது உயிரற்ற அரக்கியின் உடல்மீது குழந்தை விளையாடுவதைக் கண்டு திடுக்குற்று ஓடிச்சென்று குழந்தையைத் தூக்கினாள். குழந்தையோ அழகாகச் சிரித்தது. இது கம்சன் குழந்தையைக் கொல்லச் செய்த சூழ்ச்சி என்பதை யசோதையும் நந்த கோபரும் நன்குணர்ந்து மிகவும் விழிப்புடன் நன்கு பாதுகாத்து குழந்தையை வளர்க்கலாயினர்.

கம்சனால் ஏவப்பட்ட நூற்றுக் கணக்கான அரக்கர்களை எல்லாம் சிறுவனான கண்ணன் கொன்றொழித்தான. சிறுவயது முதலே கிருஷ்ணனும் பலராமனும் தங்கள் வீட்டிலுள்ள வெண்ணையை மட்டுமல்லாமல் அயல் வீடுகள், ஊரார் வீடுகளிலும் உள்ள வெண்ணைகளை எல்லாம் திருடி உண்பார்கள். தொல்லை தாங்காத கோபியர்கள் யசோதையிடம் முறையிட்டும் பலனில்லாமல் போகவே, ஒரு நாள் கண்ணனைக் கையும் மெய்யுமாகவே பிடித்துக் கட்டிவைத்து விட்டு, யசோதையை அழைத்து வந்து காட்டுவதற்குக் கோகுலத்திற்குப் போனார்கள். அங்கே கண்ணன் யசோதை அருகிலே நல்ல பிள்ளை போல் இருந்தான். வந்த விஷயத்தை யசோதைக்குக் கூற

## இன்று கிருஷ்ண ஜெயந்தி

முடியாமல சமாளித்துவிட்டுத் திரும்பித் தமது வட்டிற்குப் போனார்கள். அங்கே பார்த்தால் கண்ணன் கட்டுப்பட்டபடியே இளநகை புரிந்த படி இருந்தான். ''மாயன் கோபால கிருஷ்ணன் செய்யும் ஜாலத்தைக் கேள் தாயே யசோதா''

'புல்லாங்குழல் கொண்டு வருவான்' 'தின்னப் பழங்கொண்டு வருவான் பாதி தின்கின்ற போதிலே தட்டிப்பறிப்பான்' என்னென்ன லீலைகளை எல்லாம் கண்ணன் செய்தான். சொல்லில் அடங்காதது அவனது லீலைகள்.

இளைஞனான பின் தன் மாமனாகிய கம்சனை போர் செய்து வதைத்தான். அதன் பின் முடிசூட்டி துவாரகாபுரியை ஆட்சி செய்தான். றுக்மணி சத்தியபாமா என்னும் இரு பெண்களையும் மணந்தான்.

மலையைக் குடையாகப் பிடித்து ஆவினங்களையும் யாதவர்களையும் காத்தான். காலிங்கன் என்னும் கொடிய நச்சுப் பாம்பை அழித்தான். கோபியர்களின் சேலையைத் திருடினான். பூரண சரணாகதி அடைந்தால் பக்தர்களை உடன் காப்பேன் என்ற தத்துவமாக பாஞ்சாலியின் மானங்காத்தான். எவரொருவர் அன்போடு பூவும் இலையும் நீரும் எப்போதும் எனக்கு அளிக்கிறாரோ அவர் தப்பாது என் பதத்தையே அடைவார். எங்கெல்லாம் அதர்மம் தலைதூக்கி தர்மம் குன்றிப் போகுமோ அங்கெல்லாம் தர்மத்தைக் காப்பதற்காக என்னை நானே பிறப்பித்துக்கொள்வேன். சேனைத் தலைவன் ஸ்கந்தனாகவும் நானிருக்கிறேன். மனச் சோர்வானது வீரனுக்காகாது. உயிர்கள் அழிவில்லாதது. உடைகளை மாற்றுவது போல் உயிர்களும் உடலைவிட்டு வேறோர் உடலுள் புகுந்து மறுபிறப்பெடுக்கின்றன. பல பிறவிகள் எடுத்த உயிர்கள் ஈற்றில் ஈஸ்வரப் பரம்மாவாகிய என்னை வந்தடைகின்றனர். இந்த விதமான போர் வாழ்வியம் தத்துவமான கீதையை உபதேசித்தார் கிருஷ்ண

**மாருதி ஆவரங்கால்**

பரமாத்மா. வெறுமனே அருச்சுனனுக்கு மட்டும் கீதை உபதேசிக்கப்பட்டதல்ல. உலக வாழ்வில் தடுமாறும் மாந்தர்களாகிய நாம் அனைவரும் கீதையின் சாரத்தைப் புரிந்து கொண்டு வாழவேண்டும்.

கண்ணன் பிறந்த நாளாகிய ஆவணி மாத அபரபக்கத்து அட்டமி ரோகினி நன்நாளை உலக மாந்தர் அனைவரும் கொண்டாடி மகிழ்ந்து வருகின்றனர். அனேகமான மக்கள் இந்நாளில் விரதம் அனுட்டித்து வருகின்றனர்.□

# 37வது பீடாரோகண விழாக் காணும் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் 37வது பீடாரோகண விழா இன்று நடைபெறுவதை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது. (ஆ.ர்)

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தப் பெருமான் புனிதவாய் மலர்ந்தழுத்தால் வேத நெறி தழைத்து-சைவத்துறை வாழ்ந்தது-பூத பரம்பரை பொலிந்தது என சேக்கிழார் பெருமான் கூறுகின்றார்.

இங்கே பூதம்பரம்பரை ஆதீன வழிவந்த ஞானாசாரிய குரவர்களாகும்.

அத்தகைய ஆதீன பரம்பரையாக விளங்கி இன்றும் தன்னிகரற்ற சேவையாற்றி வருவது சங்கத்தமிழ் வளர்த்த மதுரையிலே உள்ள திருஞானசம்பந்தர் ஆதீனம்.

ஞானசம்பந்தப் பெருமான் சீர்காழியிலே முருகனது அவதாரமாகத தோன்றியவர் சைவமும் தமிழும் வாழவேண்டும் என்ற நோக்குடன் தெய்வீகத் தன்மையால் திருமுறைகளைத்தந்து பல அற்புதங்களைச் செய்து மக்களை ஆத்மீக நெறி நின்று வாழவைத்தவர். அவரது தேவாரப் பதிகங்கள் மண்ணில் நல்லவணணம் வாழவகை செய்வன.

### மதுரை ஆதீனக்கிளை

மதுரை ஆதீனத்தின் கிளையாக யாழ்ப்பாணத்து நாவலர் அவதரித்து பணிசெய்த நல்லூரிலே நல்லைமுருகன் ஆலயச் சூழலிலே 1966ஆம் ஆண்டு குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆதீன முதல்வராக சுவாமிகள் நியமனம்பெற்ற காலம்முதல் சமாதியடைந்த காலம்வரை இறையருளாலும், விடாமுயற்சியாலும் தன்னுடல், பொருள்,ஆவியை அர்ப்பணித்து ஆதீன வளர்ச்சிக்கெனவே வாழ்ந்தார்.

தனிமனிதனாக வாழ்ந்து சேவையாற்றியவர் ஆதீனத்தை அமைத்து பணிகளை விஸ்தரித்தார். ஞானசம்பந்தப் பெருமான் வழிநின்று

**சோ.இ.பரணதார்த்திஹரக் குருக்கள் (வண்ணை சிவன்கோவில்)**

நாளும் தமிழோடிசை பரப்பினார். ஆலயங்கள் தோறும் சென்று வீதிப் பஜனைகள் நிகழ்த்தினார்.

ஆதீனம் நம் சைவமக்கள் மத்தியில் ஒரு பல்கலைகளையும் வளர்க்கும் நிறுவனமாக விளங்கவேண்டும் என்று கருதி அதற்கான ஆலோசனை சபையினை நிறுவி 20அம்சத்திட்டமொன்றை ஏற்படுத்தினார். ஆதீன யோகாசன வகுப்பு, சைவ சித்தாந்த வகுப்பு, பண்ணிசை வகுப்பு, நடன வகுப்பு, புராண படனம், திருமுறை முற்றோதல், திருநெறிய தெய்வீக மகாநாடு, குருபூசைத் தினங்கள், பாலர் பாடசாலை முதலானவற்றை ஆதீன கலாமண்டபத்தில் நடைபெற்று வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக தமிழீழத்தில் கதாப்பிரசங்கத்துறை வளர்ச்சிக்குத் தனித்துவமான நிலையை வளர்த்த பெருமை சுவாமிகளையே சாரும். இன்றைய கால கட்டத்தில் தமிழ்மக்கள் தம் கலை, கலாசாரம், பண்பாடு, நல்லை ஆதீனம் போன்ற பாரம்பரிய சொத்துக்களைப பாதுகாக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இந் நிலையிலும் இன்று இரண்டாவது சந்நிதானமாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் பொதுமக்களின் உதவியுடன் குரு பாரம்பரியம் தவறாத ஆதீனம் சார்ந்த சீரிய பணிகளால் புது மெருகுடன் சிறந்து விளங்குவது பெருமை தருவதாகும்.

இன்று நடைபெறும் பீடாரோகண விழாவில பல துறைகளைச் சேர்ந்த கலைகளையும் வளர்க்கும் பல்கலைக்கழகமாக விளங்கும் நல்லை ஆதீனம் ஈழத்து இந்துமதம் சார்ந்த மக்களின் ஏகோபித்த ஸ்தாபனமாக விளங்க ஆக்கமும் ஊக்கமும் அளித்து குருமகா சந்நிதானத்தின் சிந்தனையைச் செயல்படுத்து வோமாக.□

## தினசரி தியானம்

### விதை

உங்கள் அறிவைப்பற்றி வீணாகப் பெருமை கொள்ளாதீர்கள். பணிவாக நடந்துகொள்ளுங்கள். பிரம்ப வித்தையைக் கற்றுக்கொள்ளுங்கள். கடவுள் பற்றிய அறிவைக் கற்றுககொள்ளுங்கள். இந்த விஞ்ஞானத்தை அடக்கம் உடையவர்களால்தான் கற்றுக்கொள்ள முடியும். தீய நூல்களைப் படிப்பது உட்பட எல்லா மயக்கங்களிலிருந்தும் நீங்கள் விடுபட வேண்டும். நீங்கள் கற்றது கைமண் அளவு. கற்கவேண்டியது உலக அளவு. பிரம்மவித்தை ஒன்றே உங்களுக்கு அழியா நிலையைத் தரமுடியும். அதுதான் உங்களுக்கு ஆற்றலை அளிக்கக்கூடியது. அதற்கான விதையை இப்போதே உங்கள் உள்ளத்தில் விதையுங்கள்.

**சுவாமி சிவானந்தர்**

### நூல் வெளியீடு

யாழ். பல்கலைக் கழகம் மற்றும் நியூசிலாந்து மஸ்லி பல்கலைக் கழகத்தின் பொருளியற் துறைப் பேராசிரியர் வி.நித்தியானந்தத்தின் 'இலங்கையின் பொருளாதார வரலாறு வடக்குக் கிழக்குப் பரிமாணம்' நூல் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு இளம்பொருளியலாளர் மன்றத் தலைவர் எஸ். ராஜ்குமாரின் தலைமையில் யாழ்.பல்கலைக் கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

இந் நிகழ்வின் அறிமுகவுரையை இலண்டன் தமிழ் சர்வதேச ஒலிபரப்புச் சேவைப் பணிப்பாளர் த. ரஞ்சித்தும், பேராசிரியர் எஸ். மோகனதாஸும், நூல் ஆய்வுரையை யாழ். பல்கலைக் கழக முன்னாள் ஆங்கிலப் போதனாசிரியர் ஏ. கே. கனகரத்தினம், நோர்வே விவசாய பல்கலைக் கழகத்தின் அபிவிருத்திக் கல்விப் பேராசிரியர் ந. சண்முகரத்தினம் ஆகியோரும் ஆற்றவுள்ளனர்.

# உலகமட்ட விளையாட்டு போட்டியில் யாழ்.பல்கலை வீரர்கள் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

தென்கொரியாவின் 'டாகு' நகரில் நாளை வியாழக்கிழமை முதல் 31ஆம் திகதிவரை நடைபெறவுள்ள உலக பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் யாழ்.பல்கலைக்கழகமும் பங்குபற்றவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மெய்வல்லுநர்களான சி.றஞ்சித்குமார், அ.துஷ்யந்தன் ஆகியோர் இதில் பங்குபற்றவுள்ளனர்.

பயிற்றுநர் செல்வி இ.அருளம்பலம், உடற்கல்வி அலகின் இணைப்பாளர் கே.கணேசநாதன் ஆகியோர் இலங்கைப் பல்கலைக் கழகங்களின் சார்பில் அலுவலர்களாக செல்லவுள்ளனர். (உ-10)


# நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு நிகழ்வுகள்




சங்கீத பூஷணம் போல் திலகநாயகம் அவர்களின் இசைக் கச்சேரி.



நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் உரையாற்றுகிறார்.



# இடைக்கால நிர்வாகசபைக்கு எதிரான பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்போருக்கு ஐ.தே.மு.அடியாட்களால் அச்சுறுத்தல்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகசபையை எதிர்த்து ஜே.வி.பி.யினர் மேற்கொண்டுவரும் பிரசாரக் கூட்டங்களில் பங்குபற்றபவர்களை ஐக்கியதேசிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்களது அடியாட்களும் அச்சுறுத்தி வருவதாக ஜே.வி.பியின் செயலாளர் திலக் கருணாரட்ண குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொடக வெலப் பிரதேசத்தில், இடைக்கால நிர்வாகசபையை எதிர்க்க வேண்டியதன் அவசியம் பற்றியும் அரசு மேற்கொண்டுள்ள சமாதான நடவடிக்கையினால் ஏற்படப் போகும் விபரிதம் பற்றியும் விளக்கும் வகையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஒருவரை இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தியுள்ளார்.

வடகும்புர பிரதேசத்தில் சமாஜவாதிசங்க மாணவர்கள் சிலரை ஐக்கியதேசியக் கட்சியின் பிரதேச சபைத் தலைவர் ஒருவர் கடுமையாக தாக்கியதில் ஒருவர் படுகாயமடைந்தநிலையில் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் ஜே.வி.பி.யின் செயலாளர் திலக் கருணாரட்ண மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

## பண்டார வன்னியனின் புகைப்படக் கண்காட்சி

(கிளிநொச்சி)

தமிழீழத்தின் கடைசி மன்னனான பண்டார வன்னியன், ஆங்கிலேயர் முல்லைத்தீவு இராணுவ முகாமை வெற்றிகொண்ட 200ஆவது ஆண்டை நினைவுகூரும் வகையில் புகைப்படக் கண்காட்சி இன்று காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது.

வரலாற்றுப் புகழ் மிக்க இக் கண்காட்சியை தமிழீழ கல்விக் கழகத்தினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

இக்கண்காட்சி இம்மாதம் 25ஆம் திகதிவரை மக்கள் பார்வைக்கு திறந்துவைக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ)

## உதைபந்தாட்ட அணி நுவரெலியா பயணம்

(சுண்டுக்குளி)

மாவட்ட மட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்காக அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் 13 வயதிற்குட்பட்ட உதைபந்தாட்ட அணி இன்று நுவரெலியாவுக்கு செல்கின்றது.

நுவரெலியா செல்லும் இக் கல்லூரியணி நாளை மறுதினம் 22ந் திகதி காலை திருகோணமலை மாவட்ட அணியுடனும், மாலை கொழும்பு மாவட்ட அணியுடனும், 23ந் திகதி கண்டி மாவட்ட அணியுடனும் மோதவுள்ளது. (ந-110)

## போதைப் பொருளுடன் பெண் கைது

(புத்தளம்)

புத்தளம் தில்லையடிப் பகுதியில் 47 பொதிகளில் போதைப் பொருள் வைத்திருந்த பெண் ஒருவரைப புத்தளம் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

புத்தளம் பகுதியில் தற்சமயம் இடம்பெற்றுவரும் திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களையடுத்து தில்லையடிப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியவர்களை அவதானித்த மக்கள் புத்தளம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இம் முறைப்பாட்டின் அடிப்படையில் சிலாபம் விசேட குற்றப்புலனாய்வுப் பொலிஸார் நடத்திய தேடுதலில் மேற்படி பெண் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (உ-15)

## சிறுவர்கள் ஒப்படைப்பு

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்த சிறுவர்கள் இருவர் கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையில் நேற்று பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பட்டிருப்புக்கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கார்த்திக் தலைமையில் இவ் ஒப்படைப்பு நிகழ்வு இடம்பெற்றது.(இ-5,14)

## புலிகளின்...

புலித்தேவன், பொருளியல் நிபுணர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் இக் குழுவினருடன் இணைந்து இன்று பாரிஸ் புறப்படுவார்கள்.

பாரிஸ் செல்லும் இக் குழுவினர் சுமார் 10 தினங்கள் அங்கு தங்கியிருந்து இடைக்கால நிர்வாக சபை தொடர்பான பதில் திட்டவரைபினை ஆராய்ந்து இறுதி வடிவத்தை தயாரிப்பார்கள். (ம)

## முகமாலை...

துள்ளது.


தம்மைக் கைது செய்தால் தாம் சயனைற் உட்கொள்வோம் என்று புலிஉறுப்பினர்கள் தெரிவித்ததாலேயே அவர்களிடமிருந்து சயனைற்றைப் பறிமுதல் செய்ததாக இராணுவம் தெரிவித்துள்ளது.

## பத்தாவது ஆண்டு நிறைவு


(கிளிநொச்சி)

தமிழீழ நீதி நிர்வாகத்துறை நாளை வியாழக்கிழமை பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது.

தமிழர் தாயகப் பகுதி எங்கும் தமிழீழ நீதிநிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்திவரும் தமிழீழ நீதிநிர்வாகத்துறையினர் கடந்த 10 ஆண்டு



நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் உரையாற்றுகிறார்.




நல்லை ஆதீன முதல்வர், சுவாமி சித்துருபானந்தா, கலாநிதி செ.திருநாவுக்கரசு, சைவசமய விவகாரக் குழுவின் செயலாளர் இரா.இரத்தினசிங்கம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருக்கின்றனர்.



மலராசிரியரிடமிருந்து தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான பிரதிநிதி முதற்பிரதியை ஏற்றுக்கொள்கிறார். அருகில் குழுவின் பொருளாளர் து.சோமசுந்தரம் அவர்களும் காணப்படுகிறார்.

திகதி காலை திருகோணமலை மாவட்ட அணியுடனும், மாலை கொழும்பு மாவட்ட அணியுடனும், 23ந் திகதி கண்டி மாவட்ட அணியுடனும் மோதவுள்ளது. (ந-110)

## புலிகளின்...

புலித்தேவன், பொருளியல் நிபுணர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் இக் குழுவினருடன் இணைந்து இன்று பாரிஸ் புறப்படுவார்கள்.

பாரிஸ் செல்லும் இக் குழுவினர் சுமார் 10 தினங்கள் அங்கு தங்கியிருந்து இடைக்கால நிர்வாக சபை தொடர்பான பதில் திட்டவரைபினை ஆராய்ந்து இறுதி வடிவத்தை தயாரிப்பார்கள். (ம)

## திருகோணமலை...

இராணுவத் தலைமையகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

இராணுவத் தலைமையகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஜோன் செனிவீரா திருகோணமலை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர், விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோரை நேற்று சந்தித்துப் பிரியாவிடை பெற்றுக் கொண்டார்.

புதிய இராணுவத் தளபதியாக நியமனம் பெற்றுள்ள பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் கிழக்கு மாகாண நிலை குறித்து திருகோணமலை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## கிழக்கு...

இதனை நிவர்த்தி செய்வது தொடர்பில் நீண்ட நேரம் இரு தரப்பினரும் கலந்தாலோசனை நடத்தினர்.

இதனையடுத்து கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பை பலப்படுத்தவும் அங்கு இயல்புவாழ்வை ஏற்படுத்தவும் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அதிகாரிகளுக்கு திலக் மாரப்பன உத்தரவிட்டார்.

அத்துடன் எவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி ஆராயப்பட்டதுடன் குறுகிய காலத்தில் இந்த நடவடிக்கைகளை அமுல்படுத்துவது பற்றியும் கலந்தாலோசனை நடத்தப்பட்டது.

இதேவேளை, நேற்று முன்தினம் பிரதமரைச் சந்தித்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலை குறித்து பேச்சு நடத்தியதும் குறிப்பிடத்தக்கது.(உ)

களை அவதானித்த மக்கள் புத்தளம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இம் முறைப்பாட்டின் அடிப்படையில் சிலாபம் விசேட குற்றப்புலனாய்வுப் பொலிஸார் நடத்திய தேடுதலில் மேற்படி பெண் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (உ-15)

## முகமாலை...

துள்ளது.

தம்மைக் கைது செய்தால் தாம் சயனைற் உட்கொள்வோம் என்று புலிஉறுப்பினர்கள் தெரிவித்ததாலேயே அவர்களிடமிருந்து சயனைற்றைப் பறிமுதல் செய்ததாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இச்சம்பவம் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து எவ்வித தகவல்களும் வெளியிடப்படவில்லை.(இ-5)

## காணாமல்...

இவ்வாறு காணாமல் போன பிரஸ்தாப இளைஞனைத் தேடி மரியகுமாரும், இன்னொரு நபரும் கடந்த முதலாந் திகதி, கிளிநொச்சிக்குச் செல்வதற்காக, முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியில் உடற் சோதனைக்காக தரித்து நின்றனர்.

சோதனைகள் முடிந்து மரியகுமாருடன் சென்ற மற்ற நபர் வெளியே சென்ற போதும் மரியகுமார் வராததையடுத்து அவரைத் தேடினார். எனினும் அவரை எங்கும் காணவில்லை.

இச் சம்பவம் குறித்து மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. (இ-4)

அரசியல் துறைப் பொறுப்பாளர் கார்த்திக் தலைமையில் இவ் ஒப்படைப்பு நிகழ்வு இடம்பெற்றது.(இ-5,14)

## பத்தாவது ஆண்டு நிறைவு

(கிளிநொச்சி)

தமிழீழ நீதி நிர்வாகத்துறை நாளை வியாழக்கிழமை பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது.

தமிழர் தாயகப் பகுதி எங்கும் தமிழீழ நீதிநிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்திவரும் தமிழீழ நீதிநிர்வாகத்துறையினர் கடந்த 10 ஆண்டு காலமாக பல்வேறு பிரச்சினைகளை இதன்மூலம் தீர்த்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## மூதூரில் தொடர்ந்து ஊரடங்கு அமுல்

(திருகோணமலை)

மூதூர் பொலிஸ் பிரதேசத்தில் நேற்று இரவும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இரவு 9 மணிக்குப் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் அதிகாலை 4 மணிவரை அமுலில் இருக்கும்.

இப்பகுதியில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொருட்டே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதாக கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் வஜயசிங்க தெரிவித்துள்ளார். (ந-3)

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 30

மாணவர் முழுப்பெயர்:.............................................

பாடசாலையின் பெயர்:.............................................

வீட்டின் முகவரி:.............................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 27.08.2003இற்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

குறிப்பு:-மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக் கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாக குறிப்பிடவும்., பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
15,வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.